# குறிப்பேடு

21 மலர் | 4 இதழ் | 2002 ஏப்ரல்




## மானிட தொடர்பாடலின் வளர்ச்சி

இலங்கை மத்திய வங்கியின் சமூக, பொருளாதார மாதாந்த வெளியீடு

# மானிட தொடர்பாடலின் வளர்ச்சி

– *அமரபால கரசிங்க ஆரச்சி,* தகவல் திணைக்களம்

தொடர்பாடல் இன்று மிகப் பிரசித்திபெற்ற ஒரு விடயமாக மாறிக்கொண்டு வருகின்றது. பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் ஒரு கலையாக இப்பாடத்தைக் கற்கின்ற மாணவ,மாணவிகள் பலர் உள்ளனர். இன்று இவ்விடயம் இவ்வாறு பிரசித்தி பெற்றிருப்பதன் காரணத்தினால் இதனைப் புதியதொரு விடயமாகக் கருதுவதில் உண்மை கிடையாது. இது மனிதன் நாகரிகமடையத் தொடங்கிய நிகழ்வைப் போன்றே பழமையானதாகும். மனிதன் நெருப்பையும் அத்துடன் மொழி எனப்படும் தொடர்பாடல் ஊடகமொன்றையும் பயன்படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்தே நாகரிகமடைதல் ஆரம்பமாகின்றது, மனித வரலாற்றில் மாபெரும் வெற்றியாக விஞ்ஞானிகளும், மானிடவியலாளர்களும் சமூகவியலாளர்களும், நெருப்பும் மொழியும் கண்டுபிடிக்கப்பட்டதையே குறிப்பிடுகின்றனர். தொடர்பாடல் கற்கைகளின் வரலாறு 17 ஆம் நூற்றாண்டு வரை நீண்டு செல்கின்றது. முதலில் 1672 இல் ஜேர்மனியின் லிப்ஸிக் (Leipzig) பல்கலைக்கழகத்தில் Journalism எனப்படும் பத்திரிகைக் கலை கற்பிக்கப்பட்டது. 1690 இல் பத்திரிகைக் கலை தொடர்பாக கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவில் 80 ஆம் தசாப்தத்தின் இறுதியாகும் போது 600 பல்கலைக்கழகக் கல்லூரிகளில், அதாவது நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் நூற்றுக்கு 20% வீதமானவற்றில் இப்பாடம் கற்பிக்கப்பட்டது. இதில் நூற்றுக்கு 20% வீதமானவர்களுக்குப் பட்டப் பின்படிப்புப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

மனிதனால் தனித்து வாழமுடியாது. நாகரிகமடைந்த காலத்திலிருந்து ஒன்றுகூடியே வாழ்கிறான். உலகமயமாக்கப்பட்ட பொருளாதார முறையொன்றுவரை வளர்ச்சியடைந்துள்ள உலக முன்னேற்றப் பாதையில் மனிதனால் ஒரு நொடியேனும் தனித்துச் செயலாற்ற முடியாதுள்ளது. தொடர்பாடல் இதன் காரணமாகவே மிக நெருங்கிய தொடர்ப்பு கொண்டதாயுள்ளது. எப்பொழுதும் மனிதனுக்கு உலகத்திலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உலகத்திற்குத் தகவல்களை விநியோகிப்பதற்கும் வேண்டியேற்படுகின்றது. இன்று பூமிக்கு மேல் விண்வெளியில் மூன்று இடங்களில் தக்க வைக்கப்பட்டுள்ள செயற்கைக் கோள்கள் மூலம் எந்தவொரு தகவலையும் எந்தவொரு இடத்திற்கும் அனுப்பிவைப்பதற்கு ஏறத்தாழ 6 வினாடிகள் போன்றதொரு சொற்ப நேரமே எடுக்கின்றது. பந்து வீச்சையும், துடுப்பாட்டத்தையும், பந்து ஆடுகளத்திற்குக் குறுக்கே உருண்டு செல்வதையும் அதே நேரத்தில் (Real Time) தொலைக்காட்சியின் மூலம் அல்லது கணனியின் மூலம் உலகின் அனைவரும் கண்டு களிப்பது தொடர்பாடலின் துரித வேகத்தின் காரணத்தினாலேயாகும். டொலரின், பிரித்தானிய

14ம் பக்கத்திற்கு....

**குறிப்பேடு** ISSN 1391-7676

2002, ஏப்ரில்

ஒரு பிரதியின் விலை : ரூபா 10.00

வருடாந்த சந்தா : ரூபா 240.00 (தபாற் கட்டணத்துடன்)

தகவல் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி எனப் பெயரிடப்பட்ட காசுக் கட்டளைகள்/காசோலைகள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படுவதன் மூலம் குறிப்பேடு சஞ்சிகையை மாதாந்தம் தபாலில் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்
தகவல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590, கொழும்பு.

**கட்டுரைகள்** **பக்கம்**

| கட்டுரைகள் | பக்கம் |
|---|---|
| மானிட தொடர்பாடலின் வளர்ச்சி | 02 |
| பொது நிதியியல் நடவடிக்கைகளும் அதன் முகாமைத்துவமும் | 03 |
| முழு நாட்டிற்கும் பொதுவானதொரு விலைச் சுட்டெண் | 08 |

"குறிப்பேடு" சஞ்சிகையில் இடம்பெறும் கருத்துக்கள், கட்டுரை ஆசிரியரின் கருத்துக்களேயொழிய இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாகாதிருக்கலாம்

# பொது நிதியியல் நடவடிக்கைகளும் அதன் முகாமைத்துவமும்

- உபாலி ஹெட்டிஆரச்சி, *நிதியியல் அலுவல்கள் திணைக்களம்*

**ஒரு** நாட்டின் நாளாந்த நடவடிக்கைகளைப் பேணி வருவதற்கும் சம்பளங்களையும் படிகளையும் செலுத்துவதற்கும், பொது நிருவாக அலுவல்களைப் பேணி வருவதற்கும் கடன் வட்டித் தொகைகளைச் செலுத்துவதற்கும், அரச நிறுவனங்களையும் உள்ளூராட்சி நிறுவனங் களையும் பேணி வருவதற்குத் தேவையான மூலதனச் செலவீனங்களை அடைப்பதற்கும் எந்தவொரு நாட்டிற்கும் நிதி தேவைப்படுகின்றது. இதற்காக ஒரு நாட்டிற்கு வருமானம் கிடைக்கக்கூடிய வழிவகைகள் உள்ளதோடு, இந்தச் செலவுகளுக்கும் வருமானத்திற்கும் இடையே பற்றாக்குறையொன்று உருவாகின்ற போது இப் பற்றாக்குறையை நிதியிடுகின்ற முறை உட்பட்ட செயற்பாட்டை பொது நிதியியல் நடவடிக்கையெனக் குறிப்பிடுகிறோம்.

அரச செலவினங்களைப் பிரதானமாக நடைமுறைச் செலவினம், மூலதனச் செலவினம் என வகைப்படுத்தலாமென்பதோடு, 15வது விளக்கக் குறிப்பின் மூலம் இது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அரச செலவினம் = நடைமுறைச் செலவினம் + மூலதனச் செலவினம் (முதலீட்டுச் செலவுகள்)


$$GE = CE + IE$$

நடைமுறைச் செலவினங்களுக்குரியதான பிரதானமான விடயங்களாக, சம்பளமும் படிகளும் உட்பட பண்டங்கள், சேவைகளுக்கான செலவினங்கள், கடன் பெறுகைகளுக்கு ஏற்புடையதாக உள்நாட்டு ரீதியிலும், வெளிநாட்டு ரீதியிலும் செலுத்தவேண்டி வருகின்ற கடன் வட்டித் தொகைகளுக்கான செலுத்துகைகள், மானியங்கள் மற்றும் சமூக, பொருளாதார சேவைகளைப் பேணிக் கொண்டு நடத்துதலுடன் தொடர்புடைய செலவுகள், அரச கூட்டுத் தாபனங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செய்யப்படுகின்ற நடைமுறை ஒப்படைப்புகள் ஆகியன உட்பட்ட செலவினங்களை குறிப்பிடலாம். பிரதானமாக, பொருளாதார நடவடிக்கைகளுக்காகச் செய்யப்படுகின்ற செலவுகளும் இந்த நடைமுறைச் செலவுகளில் உள்ளடங்குகின்றன.


மூலதனச் செலவினங்களுக்கு உரியதான பிரதானமான விடயங்களை ஒரு நாட்டிற்குத் தேவையான உண்மைச் சொத்துக்களை அடைவதற்காகச் செய்யப்படுகின்ற செலவுகள், அரச கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள், துணை அரச நிறுவனங்களுக்குச் செய்யப்படுகின்ற மூலதன ஒப்படைப்புகள் மற்றும் வேறு விதமான அபிவிருத்தி ரீதியிலான அல்லது முதலீட்டு ரீதியிலான செலவினங்கள் என்றவாறாகக் குறிப்பிடலாம் (2வது விளக்கக் குறிப்பு).

பொது நிதியியல் நடவடிக்கைகளின் அடுத்த முக்கிய பிரிவாயுள்ளது ஒரு நாட்டிற்கு வருமானம் கிடைக்கின்ற வழிவகைகள் யாதென்பதாகும். ஒரு நாட்டிற்கு வருமானம் கிடைக்கின்ற பிரதான வழிவகைகளை வரி வருமானம் மற்றும் வரிகளல்லாத வருமானம் எனக் குறிப்பிடலாம். வருமானவரி, முத்திரை வரி, பண்டங்கள், சேவைகள் வரி, மொத்த விற்பனை வரவு வரி, உற்பத்தி வரி, தேசிய பாதுகாப்பு வரி, அனுமதிப்பத்திரங்கள் மீதான வரி, மோட்டார் வாகன வரி, சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரி என்பன வரி வருமானத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இலங்கையில் புதிதாக அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசமாயுள்ள சேர் பெறுமதி வரி விதிப்பின் மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள், சேவைகள் வரியை நீக்கி விடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதோடு, இது எதிர்காலத்தில் அரசாங்கத்துக்கு வருமானம் உழைத்துத் தரக்கூடிய பிரதானமான வழிவகைகளில் ஒன்றாக அமையும் (3வது விளக்கக் குறிப்பைப் பார்க்கவும்).


1 வது விளக்கக் குறிப்பு




2 வது விளக்கக் குறிப்பு



### 3 வது விளக்கக் குறிப்பு




### 1வது புள்ளிவிபர அட்டவணை


(ரூபா மில்லியன்களில்)

| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 85,781 | 98,339 | 110,038 | 136,258 | 146,279 | 165,036 | 175,932 | 195,905 | 211,282 |
| செலவுகளையும் மீளச் செலுத்துகைகளையும் குறைத்த பின்னர் | -119,823 | -141,660 | -170,765 | -203,484 | -218,660 | -235,079 | -268,179 | -279,159 | -335,823 |
| கொடுகடன்கள் நடைமுறைச் செலவினங்கள் | | | | | | | | | |
| நடைமுறைச் செலவினங்கள் | -89,638 | -102,288 | -127,084 | -154,159 | -175,149 | -184,749 | -199,648 | -207,271 | -254,279 |
| மூலதனச் செலவினங்கள் | -24,949 | -33,661 | -30,391 | -41,723 | -37,638 | -43,982 | -54,160 | -60,340 | -67,769 |
| மீளச் செலுத்துகைகள் குறைக்கப்பட்டதன் பின்னர் கடன் வழங்கல்கள் | -5,236 | -5,710 | -13,289 | -7,602 | -5,873 | -6,366 | -14,371 | -11,548 | -13,755 |
| வரவு செலவுப் பற்றாக்குறை (கொடுப்பனவுகளுக்கு முன்னர்) | -34,042 | -43,321 | -60,727 | -67,225 | -72,381 | -70,061 | -93,147 | -83,254 | -124,541 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | -3,858 | -3,949 | -17,046 | -17,900 | -28,870 | -19,713 | -24,616 | -11,366 | -42,997 |

வரிகளல்லாத வருமானங்களாக, சொத்துக்களின் வருமானம், வட்டி வருமானம், மத்திய வங்கியின் இலாபம், கட்டணங்கள் அறவிடுதல் மற்றும் ஏனைய வருமானங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அரச வருமானத்திற்கும் செலவினங்களுக்கும் இடையில் நிலவுகின்ற இடைவெளி மிகையாகவோ, பற்றாக்குறையாகவோ இருக்கலாம் என்பதோடு, இலங்கையில் கடந்த காலங்கள் பூராவும் வருமானத்தைவிட செலவினங்கள் அதிகரித்துள்ள நிலைமை யொன்றையே காணக்கூடியதாயுள்ளது. இந் நிலைமை பற்றாக்குறை எனக் குறிப்பிடப் படுவதுடன் (Fiscal Deficit), 1992 இலிருந்து 2000 வரையிலான புள்ளிவிபர அட்டவணையின் மூலம் இந் நிலைமையை ஆராய்ந்து பார்க்கக்கூடிதாயுள்ளது. (1வது புள்ளிவிபர அட்டவணையையும் 1வது விளக்க வரைபடத்தையும் பார்க்கவும்.)

இவ் விளக்கக் குறிப்புகளையும் வரைபடங் களையும் ஆராயும்போது, தொடர்ந்து நிலவுகின்ற வரவு செலவுப் பற்றாக்குறையொன்று (Fiscal Deficit) உள்ளதென்பது தெளிவாகின்றது. அரசாங்க வருமானத்தைவிடச் செலவினங்கள் அதிகரித்துள்ள நிலைமையினுள் தொடர்ந்து வரவு செலவுப்

### 1வது விளக்க வரைபடம்





| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|---|---|
| மொ. வருமானம் | 18.5 | 17.2 | 17.7 | 16.8 | 18.3 | 17.5 |
| மொ. செலவு | 26.4 | 26.3 | 25.2 | 26.7 | 26.9 | 26.1 |

## 2வது புள்ளிவிபர அட்டவணை

மொ.தே.உ.யின் நூற்றுவீதமாக

| ஆண்டு | வரி வருமானம் | வரிகளல்லாத வருமானம் | மொத்த வருமானம் | மொத்தச் செலவுகளும் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டதன் பின்னர் கடன் வழங்கல்களும் | நடைமுறைச் செலவுகள் | மூலதனச் செலவுகளும் தேறிய கடன் வழங்கல்களும் | வரவு செலவுப் பற்றாக்குறை | நடைமுறைக் கணக்கு நிலுவை | அடிப்படைப் பற்றாக்குறை (Primary Deficit) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1997 | 16.0 | 2.5 | 18.5 | 26.4 | 20.8 | 5.6 | −7.9 | −2.2 | −1.7 |
| 1998 | 14.5 | 2.7 | 17.2 | 26.3 | 19.6 | 6.7 | −9.2 | −2.4 | −3.8 |
| 1999 | 15.0 | 2.7 | 17.7 | 25.2 | 18.7 | 6.5 | −7.5 | −1.0 | −1.9 |
| 2000 | 14.5 | 2.3 | 16.8 | 26.7 | 20.2 | 6.5 | −9.9 | −3.4 | −4.2 |
| 2001 | 16.2 | 2.1 | 18.3 | 26.9 | 19.5 | 7.4 | −8.5 | −1.2 | −2.2 |
| 2002 | 15.0 | 2.6 | 17.5 | 26.1 | 21.0 | 5.1 | −8.5 | −3.4 | −1.2 |

## 2வது விளக்க வரைபடம்




பற்றாக்குறை அதிகரித்துச் சென்றுள்ள விதத்தைக் காணக்கூடியதாயுள்ளது. இந் நிலைமை உருவாவதற்கு, அரசாங்கப் பாதுகாப்புச் செலவினங்கள் அதிகரித்துள்ளமை, மானியங்களுக்கான செலவினங்கள் அதிகரித்துள்ளமை மற்றும் வட்டி செலுத்துகைகள் அதிகரித்துள்ளமை காரணமாயமைத்துள்ளதென்பதைக் காண்கின்றோம் (4வது புள்ளிவிபர அட்டவணையையும் 2வது விளக்க வரைபடத்தையும் பார்க்கவும்.)

இங்கு கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், நடைமுறைக் கணக்கிலும் தொடர்ந்து பற்றாக்குறையொன்று நிலவுவதாகும். அதாவது, மொத்த வருமானத்தில் நடைமுறைச் செலவுகளைக் குறைத்ததன் பின்னர் பற்றாக்குறையொன்று நிலவுவதாகும் (1வது புள்ளிவிபர அட்டவணையைப் பார்க்கவும்).

இந்நிலைமையை மேலும் விளக்கும் பொருட்டு 1997 இல் இருந்து 2000 வரையிலான அரச நிதியியல் தரவுகளை ஆராய்ந்து பார்க்கவும்.

இத்தரவுகள் மொத்த தேசிய உற்பத்தியின் நூற்றுவீதமாகக் காட்டப்பட்டுள்ளன (2வது புள்ளிவிபர அட்டவணையைப் பார்க்கவும்).

2வது புள்ளிவிபர அட்டவணையைப் பரிசிலனை செய்கின்றபோது, வரவு-செலவு இடைவெளியொன்று அல்லது பற்றாக்குறையொன்றைக் காட்டுகின்ற அதேநேரம், நடைமுறைக் கணக்கிலும் அதேபோன்று பொது நிதியியல் நடவடிக்கைகளிலும் அடிப்படைப் பற்றாக்குறையொன்று உள்ளதென்பதைத் தெளிவாகக் காணக்கூடியதாயுள்ளது. (Primary Deficit) அதாவது, மொத்தச் செலவினத்தில் பெறப்பட்டுள்ள கடன்களுக்கான வட்டி செலுத்துகைகளைக் குறைத்ததன் பின்னர் வருமானத்திற்கும் செலவுக்கும் இடையில் பற்றாக்குயொன்று உள்ளதென்பதே. இதை அடிப்படைப் பற்றாக்குறை அல்லது Primary Deficit என விளக்குகிறோம் (3வது புள்ளிவிபர அட்டவணையைப் பார்க்கவும்).

4வது புள்ளிவிபர அட்டவணையின்படி, தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்ற கடன்களுக்கான வட்டி செலுத்துகைகளின் அதிகரிப்பு, பாதுகாப்புச் செலவினங்களின் அதிகரிப்பு மற்றும் மானியங்களுக்கான செலவினங்களின் அதிகரிப்பு மீது நடைமுறைச் செலவினங்கள் அதிகரிப்பதை தொடர்ந்து வரவுசெலவுப் பற்றாக்குறை விரிவடைந்து செல்லுகின்றதென்பதே தெளிவாகின்றது. இந்நிலைமையின் முன்னிலையில் ஒரு சில கேள்விகள் மேலெழுகின்றன.

அதிகரித்துச் செல்கின்ற வரவு செலவுப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு?

ஒரு நாட்டிற்கு இவ்வாறான அதி கூடிய வரவு செலவுப் பற்றாக்குறையொன்றுடன் முன்னேறிச் செல்ல முடியுமா?

அதிகரித்துச் செல்கின்ற வரவு செலவுப் பற்றாக்குறைக்குப் பங்களிப்புச் செய்கின்ற செலவினங்களை இனங்காண்பதன் மூலம் அவ்வாறான செலவினங்களை ஏதேனுமொரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியுமா?

அரசாங்கம் வரிகளை அதிகரிப்பதன் ஊடாக வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கையெடுப்பதன் மூலமும், அரசாங்கம் கடன் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை யெடுப்பதன் மூலமும், நாணயத் தாள்களை வெளியிடுவதன் மூலமும் வரவு செலவுப் பற்றாக்குறையை நிதியிடுதல் எவ்வளவு தூரத்துக்குப் பயனுள்ளதாய் அமைகிறது? மற்றும்,


வரவுசெலவுப் பற்றாக்குறையை நிதியிடுவது எவ்வாறு? என்பன இக் கேள்விகளாகும்.

**3வது புள்ளிவிபர அட்டவணை**

ரூபா மில்லியன்களில்

| ஆண்டு | மொத்த வருமானம் | நடைமுறைச் செலவுகள் | மொத்தச் செலவுகள் | வட்டி செலுத் துதல்கள் | வட்டி செலுத்துதல்கள் தவிர்ந்த மொத்தச் செலவினம் | அடிப்படைப் பற்றாக் குறை | மொ.தே. உ.யின் % வீதமாக |
|---|---|---|---|---|---|---|---|
| 1997 | 145,512 | 184,749 | 235,097 | 55,246 | 179,851 | -34,339 | -1.7 |
| 1998 | 147,368 | 199,648 | 268,179 | 54,898 | 213,281 | -65,913 | -3.8 |
| 1999 | 166,029 | 207,271 | 279,159 | 62,123 | 217,036 | -51,007 | -1.9 |
| 2000 | 182,392 | 254,279 | 335,823 | 71,200 | 264,623 | -82,231 | -4.2 |
| 2001 | 234,113 | 281,384 | 387,537 | 90,611 | 296,926 | -62,813 | -2.2 |
| 2002 | 237,149 | 332,565 | 413,627 | 117,184 | 296,443 | -59,294 | -1.2 |

**4வது விளக்கக் குறிப்பு**




பற்றாக்குறையை நிதியிடுவது எவ்வாறு? என்பதைப் பற்றி முதலில் ஆராய்வோம். (Financing the Deficit) நிதியிடப்படுகின்ற பிரதானமான ஒரு சில வழிவகைகளை இனங்காண முடியும்.

(1) உள்நாட்டுக் கடன் பெறுதல்கள் (11) வெளிவாரியான கடன் பெறுதல்கள், இவற்றில் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. (இது தொடர்பான விளக்கத்தைப் பெறுவதற்கு 4வது விளக்கக் குறிப்பைப் பார்க்கவும்.) உள்நாட்டு ரீதியிலான சந்தையில் கடன் பெறுதல்களில் வங்கிகளிலிருந்து கடன் பெறுதலும் வங்கிகளல்லாத நிறுவனங்களிலிருந்து கடன் பெறுதலும் அடங்குகின்றன. வெளிநாட்டு ரீதியில் நிதியிடப்படுகின்றவிடத்து கடன் பெறுதல்களும், அளிப்புக்களும் உள்ளடங்குவதோடு, இலங்கையில் தனியார்மயமாக்கலின் மூலம் கிடைக்கின்ற வரவுகளும் வரவுசெலவுப் பற்றாக்குறையை நிதியிடுகின்ற மேலுமொரு வழியாக உள்ளதென்பதை விளக்கலாம் (5வது புள்ளிவிபர அட்டவணையைப் பார்க்கவும்).

**4வது புள்ளிவிபர அட்டவணை**

ரூபா மில்லியன்களில்

| ஆண்டு | மானியங்கள் (குடும்ப மற்றும் ஏனைய துறைகள்) | பாதுகாப்புச் செலவினங்கள் | வட்டி செலுத்துகைகள் |
|---|---|---|---|
| 1992 | 19,819 | 5,074 | 25,940 |
| 1993 | 22,335 | 9,693 | 30,203 |
| 1994 | 28,263 | 10,604 | 38,031 |
| 1995 | 29,307 | 12,098 | 38,226 |
| 1996 | 34,114 | 13,337 | 48,923 |
| 1997 | 38,379 | 17,323 | 55,246 |
| 1998 | 37,720 | 23,004 | 54,898 |
| 1999 | 37,185 | 24,859 | 62,123 |
| 2000 | 41,815 | 28,636 | 71,200 |
| 2001 | 47,081 | 32,250 | 90,611 |
| 2002 | 55,471 | 35,196 | 117,184 |

தனியார்மயமாக்கப்படுவதற்குள்ள நிறுவனங்கள் படிப்படியாகக் குறைவடைந்து வருவதோடு தனிப்பட்ட கடன் பெறுதல்களில் கூடுதலான எதிர்பார்ப்புக்களை வைத்திருக்க முடியாத நிலையொன்று உருவாகியுள்ளது. நிவாரண ரீதியிலான வெளிநாட்டுக் கடன்களும் அளிப்புக்களும் குறைவடைந்து வருவதோடு உருவாகியுள்ள வலய ரீதியிலான யுத்த முனைப்புக்களுக்கு மத்தியில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றையொன்று அணு ஆயுதங்களால் தாக்கிக் கொள்ளுமாயின் சுற்றிலுமுள்ள வலய நாடுகளுக்கு அதன் மூலம் ஏற்படுகின்ற பாதிப்புக்களின் காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு மாத்திரமின்றி முழுத் தென் ஆசிய வலயத்திற்கும் வருகை தராதிருக்கும் நிலையொன்று உருவாகியுள்ளது.

இவ்வாறு அதிகரித்துச் செல்கின்ற வரவு செலவுப் பற்றாக்குறையொன்று நிலவுதல் ஒரு நாட்டிற்கு அனுகூலமானதல்ல என்பதைக் கூறவேண்டியதாயுள்ளதோடு பாதுகாப்புச் செலவினங்கள், கடன்களுக்கான வட்டி செலுத்துகைகள் போன்ற உற்பத்திச் செயற்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்யாத நடைமுறைச் செலவுகளுக்காக, பொருளாதார அபிவிருத்திற்கு எந்தவிதப் பங்களிப்புகளுமற்ற விதத்தில் பெருந்தொகையான நிதி செலவிடப்படுதல் நீண்டகால ரீதியில் ஒரு நாட்டிற்கு அனுகூலமானதல்லவென்பதைக் கூறுதல் வேண்டும்.. மானியங்களின் ஊடாகக்கூட உணவு மானியம், சமுர்த்தி போன்ற துறைகளுக்காகச் செலவிடப்படுகின்ற நிதியில் ஏதேனுமொரு விதத்தில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்கு இம் மானியங்களைப்

**5வது புள்ளிவிபர அட்டவணை**

**வரவு செலவுப் பற்றாக்குறை நிதியிடப்பட்ட விதம்**

ரூபா மில்லியன்களில்

| ஆண்டு | வெளிநாட்டு | உள்நாட்டு | வங்கிகலல்லாத | வங்கிகள் | தனியார்மயமாக்கல் வரவுகள் |
|---|---|---|---|---|---|
| 1997 | 17,287 | 30,275 | 41,815 | -2,171 | 22,499 |
| 1998 | 17,397 | 71,362 | 53,338 | 18,954 | 4,389 |
| 1999 | 8,245 | 74,875 | 48,426 | 27,292 | 134 |
| 2000 | 5,640 | 118,500 | 58,797 | 56,528 | 401 |
| 2001 | 40,600 | 57,457 | 68,514 | -11,057 | 25,000 |
| 2002 | 26,452 | 87,973 | 107,498 | -19,525 | 21,000 |

பெறுகின்றவர்களை ஈடுபடுத்தக்கூடிய விதத்தில் செயற்படுத்தப்படுகின்ற உறுதியானதொரு திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று இல்லாமை குறைபாடாகுமென்பதைக் காணலாம். இவ்வாறான மானியங்களைப் பெறுகின்றவர்களை எடுத்த எடுப்பிலேயே மறந்து விடுவது ஏதேனுமொரு விதத்தில் விரக்தி நிலையொன்று உருவாவதற்குக் காரணமாயமைவதோடு இவ்வாறானதொரு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கம்கூட ஒரேயடியாக முன்வராதிருக்கவும் இடமுண்டு. அதேபோன்று அபிவிருத்திச் செலவினங்கள் அல்லது மூலதனச் செலவினங்களாயினும் நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு ஏதுவாயிருப்பதன் காரணத்தினால் அவ்வாறான செலவினங்களைக் குறைப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பாதிப்படையலாமென்பதால் அவ்வாறானதொரு செயற்பாட்டிலும் ஒரேயடியாக ஈடுபடமுடியாதென்பதைக் காணலாம். இங்கு, குறைந்த அனுகூலங்களைக் கொண்ட கருத்திட்டங்களுக்குச் செய்யப்படுகின்ற முதலீடுகளைக் குறைத்துக் கொள்வதையும், நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை மேம்படுத்துவதையும் செய்யக்கூடியதாயிருக்கும்.

அவ்வாறெனில், அரசாங்கத்திற்கு நாட்டின் தேவையற்ற வீண் செலவுகளையும், பாதுகாப்புச் செலவினங்களையும் குறைக்க வேண்டி நேரிடும். ஆயினும், நாட்டினுள் உறுதியானதொரு சமாதான சூழலொன்று உருவாகியில்லாததனால் ஒரேடியாக பாதுகாப்புச் செலவினங்களைக் குறைக்க முடியாது. கடன்களுக்கான வட்டி செலுத்துகைகளையும் நிறுத்த முடியாது. பெறப்பட்ட கடன்களுக்காக வட்டி செலுத்துவதைத் தொடர்ந்தும் செய்யவேண்டி இருக்கும். அவ்வாறெனில் வருமானத்தை அதிகரிக்கச் செய்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் நீண்டகால ரீதியில் உற்பத்திச் செயற்பாட்டைத் துரிதப்படுத்துதல் போன்றவாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி வருவதோடு குறுகிய காலரீதியில் வரிகளை அதிகரித்தல், இலகுவான நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டுக் கடன்களையும் அளிப்புக்களையும் பெற்றுக் கொள்வதற்கு இராஜதந்திரச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்துவதற்குள்ள வாய்ப்புக்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துதல், வட்டி வீதங்களைக் குறைப்பதன் மூலம் உற்பத்திச் செயற்பாட்டைத் துரிதப்படுத்துவதற்காகச் செயலாற்றுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாயிருக்கும். ஆயினும், இவ்வாறான செயற்பாடுகளின்போது மக்கள் இது போன்ற செயற்பாடுகளுக்கு வழங்குகின்ற ஒத்துழைப்பு, தொழிற்சங்கச் செயற்பாடுகள், அரசியல் கட்சிகளால் காட்டப்படுகின்ற எதிர்ப்புகள் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

நிதியிடுகின்றபோது வங்கிகளல்லாத நிறுவனங்களிலிருந்து மிகக் கூடுதலான கடன் பெறப்படுகின்றதன் மூலம் தனியார் துறையின் முதலீட்டாளர்களுக்குள்ள வளங்களில் பற்றாக் குறையொன்று ஏற்படுவதற்கு இடமுள்ளதோடு, இவ்வாறு வங்கிகளல்லாத நிறுவனங்களிலுள்ள நிதியப் பற்றாக்குறையின் காரணமாக வங்கிகளிலிருந்து நிதி கடனாகப் பெறப்படுதல் படிப்படியாக அதிகரிக்கு மென்பதுடன், இது வட்டி வீதத்திலும் பணவீக்கத்திலும் அழுத்தத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாய மையலாம்.

இவ்வாறானதொரு நிலைமையின் முன்னிலையில் எதிர்காலத்தில் பொது நிதியியல் நடவடிக்கைகளில் உறுதிப்பாட்டையும் சமநிலையையும் பேணிவரவேண்டிய தேவையொன்று மேலெழுகின்றது. இவ்வாறானதொரு வேலைத்திட்டத்திற்காக தற்போது நிலவுகின்ற உள்ளமைப்பு ரீதியிலான பலவீனங்களை நீக்குதல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. செலவினங்களையும் கடன்களையும் கட்டுப்படுத்துகின்ற அதேநேரம், அவற்றைச் சிறப்பாக முகாமை செய்வதற்கும் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கும் இவ்வாறான உறுதியான வேலைத்திட்டமொன்றின் மூலம் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

இவ்வாறான வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளும்பொருட்டு உள்நாட்டு ரீதியில் வரவு செலவுப் பற்றாக்குறையை நிதியிடுகின்ற போது பொருளாதார அபிவிருத்தி நோக்கங்களை இலக்காகக் கொள்ளுதல் உட்பட சிறப்பாகத் திட்டமிடப்பட்ட சந்தைக் கடன் பெறுதல் வேலைத்திட்டங்களைத் தயாரித்தலும் வேண்டும்.

பாகிஸ்தான் இஸ்லாமாபாத் நகரத்தில் நடைபெற்ற 33 வது சர்வதேச மத்திய வங்கிகள் பயிற்சிப் பாடநெறியின், பொது நிதியியல் நடவடிக்கைகள் பற்றிய உரையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. புள்ளிவிபர அட்டவணைகள் இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2001 இல் இருந்து பெறப்பட்டன.

**பாகிஸ்தான் இஸ்லாமாபாத் நகரத்தில் நடைபெற்ற 33வது சர்வதேச மத்திய வங்கிகள் பயிற்சிப் பாடநெறியின், பொது நிதியியல் நடவடிக்கைகள் பற்றிய உரையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.**

**புள்ளிவிபர அட்டவணைகள் இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2001 இல் இருந்து பெறப்பட்டன.**

# முழு நாட்டிற்கும் பொதுவானதொரு விலைச் சுட்டெண்

**வின்சன் மார்வின் பர்னாந்து**
பிரதிப்பணிப்பாளர், வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம்.

நாட்டின் பொது விலைமட்ட அதிகரிப்பை அளவிடுவதற்கு புதிய விலைச் சுட்டெண் ஒன்று "இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்" (இ.நு.வி.சு.) என்ற பெயரில் பரீட்சார்த்த அடிப்படையில் 2002 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

இது நிதி, திட்டமிடல் அமைச்சினால் 2001 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதத்தில் நடாளாவிய விதத்திலான நுகர்வோர் விலைச் சுட்டெண் ஒன்றைத் திட்டமிட்டு மேம்படுத்தும் நோக்கத்துக்காக மாத்திரம் நியமிக்கப்பட்ட தேசிய குழுவின் பரிந்துரையின் மீதே தயாரிக்கப்பட்டது. இப் புதிய விலைச் சுட்டெண் தொடர்பாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அதற்கு முன்னர், விலைச் சுட்டெண் என்றால் யாது? விலைச் சுட்டெண் ஒன்றைத் தயாரிப்பதிலுள்ள பயன்கள் யாவை? இவ்வாறானதொரு விலைச் சுட்டெண்ணைத் தயாரிப்பது எவ்வாறு? இற்றைவரை தயாரிக்கப்பட்டுள்ள விலைச் சுட்டெண்கள் யாவை? அவற்றிலுள்ள குறைபாடுகள் யாவை? ஆகியவை பற்றி ஆராய்வது பயனுள்ளதாயிருக்கும். கட்டுரையின் முதற்பகுதி இவ் விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்காகவே ஒதுக்கப்படுகின்றது. கட்டுரையின் இரண்டாவது பகுதியின் மூலம் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பண்புகள் பற்றி ஆராயப்படுகின்றது. கட்டுரையின் மூன்றாவது பகுதியின் மூலம் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் ஏனைய விலைச் சுட்டெண்களுடன் ஒப்பிடப்படுகின்றது.

ஒரு நாட்டின் மக்களுக்காகச் செயலாற்றுகின்ற அரசாங்கமொன்று ஈட்டிக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற பொருளாதார எதிர்பார்ப்புக்களில் மிக முக்கியமான எதிர்பார்ப்பு யாதெனில், "விலை உறுதிநிலை"யை (Price Stability) ஏற்படுத்துதலாகும். விலை உறுதிநிலை என்பதன் மூலம் கருதப்படுவது யாதெனில், பண்டங்கள், சேவைகளின் விலைகளை நிலையாகப் பேணி வருதலாகும். இதன் முக்கியத்துவம் யாதெனில், ஒரு குடும்பம் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பண்டங்களையும் சேவைகளையும் குறிப்பிட்டதொரு நிலையான வருமான மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்குச் சந்தைக்கு வருகின்றபோது சந்தையில் பண்டங்களினதும் சேவைகளினதும் விலைகள் தொடர்ந்து அதிகரிப்பதின் மூலம் குடும்பத்தின் கொள்வனவுச் சக்தி (Purchasing Power) எனப்படும் நுகர்வுச் சக்தி வீழ்ச்சியுறுவதைத் தவிர்ப்பதற்கு விலைவாசிகள் நிலையாக இருத்தல் முக்கியமாயிருக்குமென்பதாகும். நிலையானதொரு வருமானத்தைப் பெறுகின்ற அரச ஊழியர்கள், ஓய்வுபெற்றோர், சமூர்த்தி பெறுநர்கள் மற்றும் ஏனைய தரப்பினரும் அவர்களுடைய பிள்ளைகளும் ஒரு நாட்டின் விலைமட்டம் அநாவசியமான விதத்தில் அதிகரிக்கின்ற போது தமது நுகர்வுச் சக்தி குறைவதன் காரணத்தினால் மிகவும் கஷ்டமான நிலைக்குள்ளாகின்றார்கள். அதாவது, அவர்களுடைய வாழ்க்கைச் செலவு (Cost of Living) அதிகரித்து அக்குடும்பங்களின் வாழ்க்கை நிலை (Level of Life) வீழ்ச்சியுறுகிறது. இந் நிலைமையிலிருந்து இம் மக்களைப் பாதுகாப்பதற்கு சம்பளத்தை அதிகரித்தல் அல்லது அவர்களுடைய வருமானத்தை அதிகரிக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அதற்கான ஒரு தீர்வாகும். ஆயினும், இதன் மூலம் பிரச்சினைக்குத் தற்காலிகத் தீர்வொன்று கிடைத்தபோதிலும், இது நிலையான ஒரு தீர்வாகமாட்டாது. ஏனென்றால், இதன்மூலம் மீண்டும் மீண்டும் பொருட்களின் விலைகள் அதிகரிக்குமென்பதனாலாகும். சம்பளம் அதிகரிக்கின்ற அளவுக்கு ஏற்ப உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்காததொரு நிலைமையினுள் இது நடைபெறுகிறது. அவ்வாறெனில் ஒரு நாடு தெரிவு செய்யவேண்டிய மிகச் சிறப்பான பாதை யாதெனில், முடியுமான அளவு உற்பத்திகளை அதிகரித்து விலை வாசிகளை நிலையான மட்டத்தில் வைத்திருக்கும் நோக்கத்தை அடைவதாகும். இதனூடாக உற்பத்திச் செலவினங்கள் குறைவடைந்து எதிர்காலத்தில் மென்மேலும் உற்பத்திகளை அதிகரிக்க முடியுமாயிருக்கும். இதனை ஏற்கெனவே அபிவிருத்தியடைந்த நாடுகள் பின்பற்றி வருகின்றன. ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் தமது விலைமட்டம் வருடாந்தம் அதிகரித்துச் செல்கின்ற வேகத்தை நூற்றுக்கு 2-3 வீதத்துக்கு இடையில் பேணி வருகின்றன. ஆயினும் இலங்கை போன்ற அபிவிருத்தி யடைகின்ற நாடுகளில் பெரும்பாலும் விலைவாசிகளின் அதிகரிப்பு வருடாந்தம் இரண்டு இலக்க மட்டத்தில் நடைபெறுகின்றன. 2001 ஆம் ஆண்டில் இலங்கையின் பணவீக்க வேகம் (Rate of Inflation) நூற்றுக்கு 14 வீதமளவிலான அதிகரித்த நூற்றுவீதத்தைக் கொண்டிருந்ததன் மூலம் இது தெளிவாகிறது. எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கிகூட தமது பிரதானமான குறிக்கோளாயிருப்பது. விலை உறுதி நிலையென்றும், இக்குறிக்கோளை ஈட்டிக் கொள்வதற்கு தனது நிதிக் கொள்கையைக் (Monetary Policy) கையாளுகிற தெனவும் ஏற்கெனவே தெரிவித்துள்ளது.

### விலைமட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றத்தை அளவிடுதல்

ஒரு நாட்டின் "விலைஉறுதிநிலை" தொடர்பான அறிவைப் பெறுவதற்கெனில் வருடாந்தம் நாட்டின் பண்டங்களினதும் சேவைகளினதும் விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களைக் கணிப்பிடுதல் வேண்டும். ஒரு நாட்டின் மக்கள் பல்வேறு பண்டங்களையும் சேவைகளையும் நுகர்பவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய வருமான மட்டத்திற்கும் ஏற்ப நுகரப்படுகின்ற பண்டங்களும் சேவைகளும் வித்தியாசப்படுகின்றன. ஆதலால் அனைவரும் நுகர்கின்ற பண்டங்களினதும் சேவைகளினதும் விலைகளின் அதிகரிப்பை அல்லது வீழ்ச்சியைத் தனியொரு நூற்றுவீத இலக்கத்தில் காட்டுவது இலகுவானதல்ல. ஒரு சில வருடங்களில் சில பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. ஒரு சில பொருட்களின் விலைகள் வீழ்ச்சியுறுகின்றன. ஒரு சில பொருட்களின் விலைகளில் மாற்றமெதுவும் நிகழாது உறுதிநிலையில் இருக்கும். இவ்வாறு ஒவ்வொரு பொருளினதும் விலை அல்லது தனிமுதல் விலை (Absolute Price) அதிகரித்தல், வீழ்ச்சியுறுதல் அல்லது உறுதிநிலைமிலிருத்தல் நடைபெறுகின்றது. ஏதேனும் ஒரு பொருளின் விலை அதிகரித்து இன்னொரு பொருளின் விலை வீழ்ச்சியுறுகின்றபோது, இரு பொருட்களினதும் சார்பு விலைகள் (Relative Price) மாற்றமுறுகின்றன. அது உற்பத்தியாளர்களின் இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். அவர்கள் புது வளங்களின் விநியோகத்தை (Resource Allocation) மாற்றியமைப்பார்கள். எவ்வாறாயினும் அனைத்துப் பொருட்களின் தனிமுதல் விலைகளினதும் மாற்றங்களின் சராசரி நிலை அல்லது பொது விலை மட்டத்தை (General Price Level) அடிப்படையாகக் கொண்டு பண்டங்களினதும் சேவைகளினதும் வருடாந்த சராசரி விலை மாற்றம் அல்லது வருடாந்தப் பணவீக்க வேகம் கணிப்பிடப்படுகின்றது. இவ்வாறு அனைத்துப் பண்டங்கள் சேவைகளினதும் பொது விலைமட்டம் மாற்றமுறுகின்ற அளவினைக் கணிப்பிடுவதற்காக "விலைச்சுட்டெண்கள்" (Price Indices) எனப்படும் அளவீட்டு முறை பயன்படுத்தப்படுகின்றது.

விலைச் சுட்டெண் என்பதன் மூலம், இரண்டு காலப் பிரிவுகளுக்கிடையில் குறிப்பிட்டதொரு மக்கள் பிரிவினர் கொள்வனவு செய்கின்ற பல பொருட்களின் விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை, அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு நேரொத்த விதத்தில் அளவிடப்படுகின்ற முறையென்பதே கருதப்படுகின்றது. ஒரு நாட்டின் பணவீக்கத்தை (Inflation) அளவிடுவதற்கு இவ் விலைகாட்டியே பயன்படுத்தப்படுகின்றது. பணவீக்கம் என்பது பணத்தின் கொள்வனவுச் சக்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பொது விலைமட்டத்தின் அதிகரிப்பாகும். இதனால் விலை காட்டிகளைப் பயன்படுத்தி ஒரு நாட்டின் பணவீக்க வேகத்தை மாதாந்தமும், வருடாந்தமும் அறிவிப்பது பலவிதத்திலும் பயனுள்ளதாயமையும். முதலாவது, சம்பளம் தொடர்பாக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவைக் கணிப்பீடு செய்வதற்கு முக்கியம் வாய்ந்ததாயிருக்கும். இரண்டாவது சர்வதேச போட்டி நிலையை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு எண்ணக்கருக்களை கணிப்பீடு செய்வதற்கு (உதாரணமாக : உண்மை விளைவுச் செலாவணி வீதம் - REER) மிக முக்கியமானதாயிருக்கும். மூன்றாவதாக, இன்றைய காரணி விலைக்கு ஏற்பக் கணிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டுத் தேசிய உற்பத்தியை, உண்மை (உறுதிநிலை விலை) மொத்த உள்நாட்டு/தேசிய உற்பத்தியாக மாற்றுவதற்கும் அதன் ஊடாக மொத்தத் தேசிய உற்பத்தியின் மூலம் வெளிப்படுத்துகின்ற தள்ளைக் (GNP Deflater) கணிப்பீடு செய்வதற்கும் பிரயோசனமாயிருக்கும். நான்காவதாக, உண்மைச் சம்பளத்தைக் கணிப்பீடு செய்வதற்கும், சொத்துக்கள் மற்றும் வாடகை போன்ற எதிர்கால உடன்படிக்கைக்கு உட்பட்ட செலுத்துகை விலைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப சீர்செய்வதற்கும் இவ் விலைச் சுட்டெண் உதவியாயிருக்கும். எவ்வாறாயினும், ஒரு நாட்டின் பணவீக்கத்தை உரிய விதத்தில் அளவிடுகின்ற அர்த்தமுள்ளதொரு விலைச் சுட்டெண்ணைத் தயாரிப்பதற்கு இலங்கை நீண்டகாலமாக பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. ஆயினும், முழு நாட்டையும் தழுவியதான விலைச் சுட்டெண்ணொன்றை 2002 ஆம் ஆண்டாகும்வரை தயாரிக்க முடியவில்லை. ஆனாலும், மாதாந்தம் வெளியிடப்படுகின்ற மூன்று விலைச் சுட்டெண்களும், வருடாந்தம் வெளியிடப் படுகின்ற நான்கு விலைச் சுட்டெண்களும் மற்றும் வெளியிடப்படாத மேலுமொரு விலைச் சுட்டெண்ணும் என்ற ரீதியில் எட்டு நுகர்வோர் விலைச் சுட்டெண்களை தற்போது காணக்கூடியதாயுள்ளது. (முதலாவது அட்டவணையைப் பார்க்கவும்)

இந்த விலைச் சுட்டெண்களில் இற்றைவரை உத்தியோகபூர்வ விலைச் சுட்டெண்ணாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணே பயன்படுத்தப் படுகிறது. ஆயினும், இது 52 வருடங்கள் பழைமையான குடும்பச் செலவு மதிப்பீடொன்றின் கீழ், கொழும்பு மாநகர சபை ஆளுகை எல்லையினுள் 455 குடும்பங்களால் நுகரப்படுகின்ற 187 பொருட்களைத் தழுவியதாகத் தயாரிக்கப்பட்ட காலம் கடந்ததொரு விலைச் சுட்டெண்ணாகும். கொழும்பிலுள்ள ஒரு சில குடும்பங்களுக்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயிருத்தல், அடிப்படை ஆண்டு (1952 = 100) 50 வருடங்களைத் தாண்டியதொன்றாய் இருத்தல், தற்போது பாவணையில் இல்லாத பொருட்கள் உள்ளடங்கியிருத்தல், பொருட்கள் பொதியிலுள்ள பொருட்களின் தரத்தின் வித்தியாசங்களைக் காணமுடியாதிருத்தல், கட்டுப்படுத்தப்பட்ட விலைகளின் மாற்றங்களின் மீது கூடுதலான கூருணர்வைக் கொண்டதாயிருத்தல் மற்றும் வாழ்க்கைச் செலவுப் புள்ளியொன்றின் பெறுமதி ரூபா. 2.02 போன்றதொரு குறைந்த பெறுமதியைக் கொண்டிருத்தல் ஆகியன இவ்விலைச் சுட்டெண் காலம் கடந்ததென்பதற்குக் காட்டப்படுகின்ற காரணங்களாகும். இப் பலவீனங்களைத் தவிர்த்து அர்த்தமுள்ள இரண்டு விலைச் சுட்டெண்களை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியொன்றாக, 1989 இல் தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் அறிமுகப் படுத்தப்பட்ட பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் 1997 இல் மத்திய வாங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் குறிப்பிட முடியுமாயிருப்பினும் மேலும் மக்களுக்கிடையே உத்தியோகபூர்வ விலைச் சுட்டெண்ணாக பிரபல்யம் பெற்றுள்ள கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் குறைபாடுகளுக்கு மத்தியிலும் முன்னணியிலுள்ளது. எவ்வாறாயினும் விலை உறுதி நிலையைப் பிரதானமான பொருளாதார, நிதியியல் குறிக்கோளாக மாற்றிக் கொள்வதற்கெனில், தற்காலப் பொருளாதாரத்தின் உண்மையான சுய உருவத்தை வெளிக்காட்டக்கூடிய புதியதொரு விலைச் சுட்டெண் முழு நாட்டையும் தழுவிய விதத்தில் தயாரிக்கப்படுதல் மிக அவசியமாயுள்ளதென்பது புலனாகின்றது அதற்கான காரணமாக, முதலாவது அண்மிய காலத்தில் பொருளாதாரம் பரந்த அளவில் பல்வகைப் பட்டுள்ளமையையும், இரண்டாவதாக, சனத்தொகையில் மத்திய வருமானம் பெறுகின்ற வர்களின் செலவு முறை கவனிக்கத்தக்க மட்டத்தில் விரிவடைந்துள்ளமையையும், மூன்றாவதாக, கொழும்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் அதேபோல் கொழும்பு மாவட்டத்திலுமுள்ள நுகர்வோர் முறையைவிட பிரதேச வாரியான நுகர்வோர் முறையும் கொள்கை வகுப்பவர்களுக்கு முக்கியமாயுள்ளமையையும் காட்டலாம்.

**1வது அட்டவணை**

**இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்**

(அடைப்புக்குறிக்குள் அடிப்படை ஆண்டு காட்டப்பட்டுள்ளது)

1. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் தயாரிக்கப்படுகின்ற விலைச் சுட்டெண்கள்
   - கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100)
   - பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1989 சன. ஜூன் = 100)
2. இலங்கை மத்திய வங்கியால் தயாரிக்கப்படுகின்ற விலைச் சுட்டெண்கள்
   - கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண் (1996 ஒக்- 1997 செப். = 100)
   - அனுராதபுரம் நுகர்வோர் விலைச் சுட்டெண் (1996 நவம் - 1999 ஒக் = 100)
   - மாத்தளை நுகர்வோர் விலைச் சுட்டெண் (1996 நவம் - 1997 ஒக் = 100)
   - மொத்தத் தேசிய உற்பத்தி வெளிப்படுத்தும் தள்ளவு (1996 = 100)
   - மேல் மாகாணத்திற்கான நுகர்வோர் விலைச் சுட்டெண் (1996 நவம் - 1997 ஒக் = 100)

## இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பண்புகள்

தகவல்களைச் சேகரிப்பதிலுள்ள கஷ்டநிலை காரணமாக நாடளாவிய விதத்திலான நுகர்வோர் விலைச் சுட்டெண்ஒன்றைத் தயாரித்தல் கடந்த காலங்களில் கடினமாயிருந்தபோதிலும், படிப்படியாக கொழும்பு, பாரிய கொழும்பு, கொழும்பு மாவட்டம், மேல்மாகாணம் மற்றும் ஏனைய ஒரு சில மாகாணங்களை உள்ளடக்கக்கூடிய விதத்தில் பூகோளப் பிரதேசங்களை விஸ்தரித்து விலைச் சுட்டெண்ணைத் தயாரிக்க முடியுமாயிருந்தமையினாலும், தகவல் தொழில்நுட்பத்தின் (Information Technology) முன்னேற்றம் காரணமாகவும் தற்போது முழு இலங்கைக்குமான தனியொரு விலைச் சுட்டெண்ணைத் தயாரிக்கக்கூடிய ஆற்றல் கிடைத்துள்ளது. இவ் விலைச் சுட்டெண்ணின் பண்புகளை ஆராய்தல் முக்கியம் வாய்ந்ததாயிருக்கும்.

## 1 வது புள்ளிவிபர அட்டவணை

## இலங்கையில் மாதாந்தம் கணிப்பீடு செய்யப்படுகின்ற விலைச் சுட்டெண்கள் தொடர்பான சுருக்கமான தகவல்கள்

| விலைச் சுட்டெண் | அடிப்படைத் தகவல் தொடர்பான மூலங்கள் | அடிப்படை காலப்பகுதி | பூகோளப் பிரதேசம் | வருமானப் பிரிவு | மாதிரிக் குடும்பங்கள் | நுகர்வுப் பொருட்களின் எண்ணிக்கை | விலை சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கொ.நு.வி.சு. | தொகை மதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களம் குடும்பச் செலவு மதிப்பீடு 49/50 | 1952 | கொழும்பு மாநகர சபை | மாதாந்த வருமானம் ரூபா 55- ரூபா 485 வரை | 455 குடும்பங்கள் | 187 | 7 |
| பா.கொ.நு.வி.சு. | தொழிற்படை மற்றும் சமூக, பொருளாதார மதிப்பீடு 1985/86 | 1989 சன. 1989 ஜூன். | பாரிய கொழும்பு பிரதேசம் | கீழ்நிலையிலுள்ள 40% (செலவுகள்) | 419 குடும்பங்கள் | 217 | 15 |
| கொ.மா.நு.வி.சு. | இல.ம.வ. நுகர்வு நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு 96/97 | 1996 ஒக் 1997 செப். | கொழும்பு மாவட்டம் | கீழ்நிலையிலுள்ள 40% (செலவுகள்) | 383 செலவுக்கூறுகள் | 197 | 11 |
| அநுராதபுரம் நு.வி.சு. | இல.ம.வ. நுகர்வு நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு 96/97 | 1996 ஒக் 1997 செப். | அநுராதபுரம் மாவட்டம் | கீழ்நிலையிலுள்ள 40% (செலவுகள்) | 172 செலவுக்கூறுகள் | 162 | 06 |
| மாத்தளை நு.வி.சு. | இல.ம.வ. நுகர்வு நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு 96/97 | 1996 ஒக் 1997 செப். | மாத்தளை மாவட்டம் | கீழ்நிலையிலுள்ள 40% (செலவுகள்) | 119 செலவுக்கூறுகள் | 142 | 03 |
| மாத்தறை நு.வி.சு. | இல.ம.வ. நுகர்வு நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு 96/97 | 1996 ஒக் 1997 செப். | மாத்தறை மாவட்டம் | கீழ்நிலையிலுள்ள 40% (செலவுகள்) | 178 செலவுக்கூறுகள் | 176 | 06 |
| மே.மா.நு.வி.சு. | இல.ம.வ. நுகர்வு நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு 96/97 | 1996 ஒக் 1997 செப். | மேல் மாகாணம் | கீழ்நிலையிலுள்ள 65% | 1,932 செலவுக்கூறுகள் | 217 | 15 |
| இல.நு.வி.சு. | தொ.ம.பு.தி. வருமான செலவின மதிப்பீடு 1995/96 | 1995 1997 | வட கிழக்கு மாகாணம் தவிர்ந்த முழு நாடும் | கீழ்நிலையிலுள்ள 80% (செலவுகள்) | 1,6031 குடும்பங்கள் | 174 | 34 (கிழக்கு மாகாணம் உட்பட) |

முதலில், இது தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 1995/96 வருமானம் மற்றும் செலவு மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 1952 குடும்பங்களை உள்ளடக்கியதாக இத்திணைக்களத்தினாலேயே தயாரிக்கப்படுகின்றதொரு விலைச் சுட்டெண் என்பதைக் குறிப்பிடலாம். இம்மதிப்பீடு வட கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களை உள்ளடக்கியதாக நடாத்தப்பட்டதால் முழு நாட்டின் 100% வீதப் பிரதிநிதித்துவமும் இல்லாதிருப்பினும், எதிர்காலத்தில் இயல்பு நிலையொன்று உருவாகுமிடத்து இக் குறைபாடும் தவிர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவதாக, இவ் விலைச் சுட்டெண் லசிபியர்ஸ் விலைச் சுட்டெண் (Laspeyres Price Index) அதாவது இன்றைய வருடத்தின் பொருட்கள் பொதியின் பெறுமதி, அடிப்படை வருடத்தின் பொருட்கள் பொதியின் பெறுமதியின் நூற்றுவீதமாகக் காட்டப்படுகின்ற விலைச் சுட்டெண்ணின் மீது உருவாக்கப்படுகிறது.

மூன்றாவதாக, அடிப்படை வருடமாக மூன்று வருடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, இது மதிப்பீட்டுக்கு முன்னரான 1995 ஆம் ஆண்டு, மதிப்பீட்டு ஆண்டு, மற்றும் மதிப்பீட்டுக்குப் பின்னரான 1997 ஆம் ஆண்டு என 1995-1997 = 100 எனக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த மூன்று வருடங்களின் சராசரியின் மூலம், இலங்கைப் பொருளாதாரத்தில் பாதிப்பான தாக்கத்தை விளைவிக்கக்கூடிய வரட்சி, உலகப் பொருளாதாரத் தளர்வு நிலை போன்ற அசாதாரண நிலைமைகளுடன் கூடிய வருடங்கள் தவிர்க்கப்படுகின்றன.

நான்காவதாக, குடும்பங்களின் செலவினத்தை 10% குழுக்களாகப் பிரித்து அதில் ஆகக் குறைந்த 8 குழுக்கள் உள்ளடங்குகின்றதான விலைச் சுட்டெண்ணுக்கும், ஆகக் கூடுதலான மற்றும் ஆகக் குறைந்த குழுக்களைத் தவிர்த்து மத்திய 8 குழுக்கள் உள்ளடங்கியதான விலைச் சுட்டெண்ணுக்கும் இடையே ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளது. இதன்படி நுகர்வுச் செலவில் 89.2% வீதம் அடங்குகின்றதான 174 பண்டங்களும் சேவைகளும் உள்ளடங்கக்கூடிய பொதியொன்றைப் பயன்படுத்தி இவ் விலைச் சுட்டெண் தயாரிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 10.8% வீதமும், இந்தச் செலவுத் தொகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இதற்குச் சம இனத்திலான பொருட்களுக்கிடையே சம விகிதாசாரத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவதாக, விலைச் சுட்டெண்ணின் எடை வைத்தல்கள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| உணவு பாணங்களும் புகையிலையும் | 71.2 |
| ஆடை அணிகளும் பாதணிகளும் | 4.2 |
| வீடு, நீர்மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய | 13.1 |
| எரிபொருள்கள் | 13.1 |
| போக்குவரத்து | 2.9 |
| பல்வேறு பொருட்களும் சேவைகளும் | 2.1 |
| ஏனையவை | 6.6 |
| **மொத்தம்** | **100.0** |

இப் புதிய விலைச் சுட்டெண் ஏனைய விலைச் சுட்டெண்களைவிட முக்கியத்துவம் வாய்ந்ததாயிருப்

**2வது புள்ளிவிபர அட்டவணை**

**நுகர்வோர் விலைச் சுட்டெண்களில் எடை வைத்தலுக்கிடையிலான ஒப்பீடு**

| உப பிரிவுகளும் பிரதானமான விடயங்களும் | கொ.நு.வி.சு. (1952=100) | பா.கொ.நு. வி.சு. (ஜன.-ஜூன். 1989=100) | கொ.மா. நு.வி.சு. (1996 நவ.-1997 ஒக்.=100) | மே.மா. நு.வி.சு. (1996 நவ.-1997 ஒக்.=100) | அநுராதபுரம் நு.வி.சு. (1996 நவ.-1997 ஒக்.=100) | மாத்தளை நு.வி.சு. (1996 நவ.-1997 ஒக்.=100) | மாத்தறை நு.வி.சு. (1996 நவ.-1997 ஒக்.=100) | இ.நு.வி.சு. (1995-1997 =100) |
|---|---|---|---|---|---|---|---|---|
| I. உணவு பானங்களும் புகையிலையும் | 70.2 | 73.1 | 63.1 | 64.2 | 70.9 | 65.9 | 68.8 | 71.2 |
| 1. அரிசி | 8.8 | 12.9 | 10.6 | 11.8 | 17.9 | 16.2 | 15.5 | 16.3 |
| 2. பாண் | 4.6 | 4.3 | 4.2 | 4.0 | 3.0 | 3.4 | 3.6 | 3.0 |
| 3. சீனி | 3.1 | 5.5 | 2.6 | 2.8 | 3.4 | 4.1 | 3.4 | 3.4 |
| 4. மரக்கறி | 6.0 | 5.3 | 3.9 | 3.6 | 4.7 | 4.6 | 3.1 | 5.6 |
| 5. மீன் | 10.2 | 7.0 | 7.9 | 7.8 | 5.6 | 6.3 | 3.3 | 7.2 |
| 6. தேங்காய் | 1.9 | 4.1 | 4.2 | 4.5 | 6.9 | 6.3 | 5.8 | 5.4 |
| 7. புகையிலை | 3.2 | 2.5 | 2.5 | 1.9 | 3.0 | 1.3 | 1.4 | 3.6 |
| II. ஆடைகளும் பாதணிகளும் | 9.4 | 2.8 | 6.2 | 7.7 | 6.7 | 9.2 | 6.0 | 4.1 |
| 8. ஆடைகள் | 9.4 | 2.8 | 5.3 | 6.5 | 5.8 | 8.2 | 5.1 | 3.7 |
| III. வீடு, நீர், மின்சாரம், கேஸ், ஏனைய எரிபொருள்கள் | 10.0 | 14.3 | 18.2 | 7.6 | 10.6 | 11.6 | 11.2 | 13.1 |
| 9. விறகு | 2.8 | 2.7 | 1.9 | 3.0 | 3.3 | 3.3 | 2.7 | 2.2 |
| IV. போக்குவரத்து | 1.9 | 2.7 | 3.7 | 5.5 | 2.6 | 2.4 | 2.0 | 2.9 |
| 10. பஸ் கட்டணம் | 1.9 | 2.6 | 2.8 | 3.0 | 1.8 | 2.1 | 2.0 | 1.9 |
| V. பல்வேறு பண்டங்களும் சேவைகளும் | 4.9 | 4.2 | 7.1 | 6.8 | 5.1 | 4.2 | 5.1 | 2.1 |
| 11. உடனலம் பேணல் | 2.5 | 1.3 | 2.0 | 3.3 | 2.7 | 1.8 | 4.5 | 1.7 |
| VI. I-V வரை உபபிரிவுகளின் மொத்தம் | 96.4 | 97.1 | 98.3 | 91.7 | 95.8 | 93.3 | 93.1 | 93.4 |
| இதில் (பிரதான விடயங்கள் 1-11 வரை) | 57.5 | 53.5 | 50.2 | 54.1 | 61.1 | 58.8 | 51.8 | 57.6 |
| VII. ஏனைய உப பிரிவுகளின் மொத்தம் | 3.6 | 2.9 | 1.7 | 8.3 | 4.2 | 6.7 | 6.9 | 6.6 |
| VIII. மொத்தம் | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

மூலம் : மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 2001.

பதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக, ஏனைய விலைச் சுட்டெண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் முழுப் பொருளாதாரத்தினதும் பணவீக்கத்தைக் கணிப்பிடுவதற்கு யதார்த்தமானதும் காலத்திற்குப் பொருந்துகின்றதுமானதொரு அளவீட்டு முறையாகும். இரண்டாவதாக ஏனைய விலைச் சுட்டெண்களைவிட விரிவானதொரு உள்ளடக்கத்தை கொண்டுள்ளது. மூன்றாவதாக, நாட்டின் மாறுபடுகின்ற நுகர்வோர் முறையினைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. நான்காவதாக, ஐந்து வருடத்துக்கு ஒரு தடவை எடை வைத்தல் புதுப்பிக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளமையினால் நீண்டகால ரீதியில் அர்த்தமுள்ள தொன்றாயிருக்கும். இவ் விலைச் சுட்டெண் பரவலான மக்கள் குழுக்களின் வரவேற்பைப் பெற்றதன் பின்னர் (இதற்கு 6 மாதத்திற்கும் ஒரு வருடத்திற்கும் இடைப்பட்டதொரு காலம் பரீட்சார்த்த காலமாக வழங்கப்படும்) ஏனைய நுகர்வோர் விலைச் சுட்டெண்களை வெளியிடுதல் நின்று விடுவதோடு முழு இலங்கையினதும் ஒரேயொரு விலைச் சுட்டெண்ணாக இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் செயற்படும்.

## இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுடன் ஏனைய விலைச் சுட்டெண்களை ஒப்பிடுதல்

தற்போது அமுலிலுள்ள 7 நுகர்வோர் விலைச் சுட்டெண்களையும் மொத்தத் தேசிய உற்பத்தித் தளர்வுடன் ஒப்பிடுகின்றபோது இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றங்கள் 1வது புள்ளிவிபர அட்டவணையின் கீழ் காட்டப்பட்டுள்ளதோடு, இவ் விலைச் சுட்டெண்களின் அளவீட்டு முறைகளுக்கிடையிலான ஒப்பீடு 2வது புள்ளிவிபர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. 1980 - 2001 வரை பல்வேறு விலைச் சுட்டெண்களின் ஊடாக கணிப்பிடப்பட்ட பணவீக்க வேகத்தின் ஒப்பீடொன்று 3வது புள்ளிவிபர அட்டவணையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1வது புள்ளிவிபர அட்டவணையின்படி தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் குடும்பச் செலவின மதிப்பீடு, தொழில்படை மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடு அத்துடன் செலவின மதிப்பீடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு 3 நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் தயாரிக்கப் பட்டுள்ளன, எஞ்சிய அனைத்து விலைச் சுட்டெண்களும் இலங்கை மத்திய வங்கியின் நுகர்வுப் பணம் மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. அடிப்படை ஆண்டைப் பொறுத்தவரை 50 ஆண்டுகள் பழைமைவாய்ந்த கொழும்பு, நுகர்வோர் விலைச் சுட்டெண்களைத் தயாரித்து 37 வருடங்களுக்கு பின்னர், அதாவது 1989 இல் இருந்து 1999 வரையிலான 10 வருடங்களுக்குள் 6 நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் உருவாகியுள்ளன. இந்த 6 இல் 5இற்கு இலக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நுகர்வோர் குழுக்கள் ஆகக் கீழ் நிலையிலுள்ள 40% வீதமாகக் கொள்ளப்பட்டுள்ளன. மேல் மாகாணத்துக்கான

### 3 வது புள்ளி விபர அட்டவணை
### வருடாந்த சராசரி விலைகளில் வித்தியாசங்கள் (%)

| ஆண்டு | கொ.நு.வி.சு. | பா.கொ.நு.வி.சு. | கொ.மா.நு.வி.சு. | மொ.வி.சு. | மொ.தே.உ.பெ. | மொ.உ.உ.பெ. |
|---|---|---|---|---|---|---|
| 1980 | 26.1 | – | – | 33.7 | 18.2 | 18.1 |
| 1981 | 18.0 | – | – | 17.0 | 20.6 | 20.6 |
| 1982 | 10.8 | – | – | 5.5 | 10.2 | 9.9 |
| 1983 | 14.0 | – | – | 25.0 | 14.7 | 14.6 |
| 1984 | 16.6 | – | – | 25.6 | 17.4 | 17.1 |
| 1985 | 1.5 | – | – | -15.2 | 0.8 | 0.9 |
| 1986 | 8.0 | – | – | -2.9 | 5.5 | 5.8 |
| 1987 | 7.7 | – | – | 13.4 | 6.8 | 6.7 |
| 1988 | 14.0 | – | – | 17.8 | 11.5 | 11.5 |
| 1989 | 11.6 | – | – | 9.0 | 9.7 | 9.6 |
| 1990 | 21.5 | 24.6 | – | 22.2 | 20.0 | 20.0 |
| 1991 | 12.2 | 11.5 | – | 9.2 | 11.2 | 11.0 |
| 1992 | 11.4 | 9.4 | – | 8.8 | 10.0 | 10.0 |
| 1993 | 11.7 | 8.4 | – | 7.6 | 9.5 | 9.5 |
| 1994 | 8.4 | 4.8 | – | 5.0 | 9.4 | 9.3 |
| 1995 | 7.7 | 3.9 | – | 8.8 | 8.4 | 8.4 |
| 1996 | 15.9 | 14.7 | – | 20.5 | 12.2 | 12.1 |
| 1997 | 9.6 | 7.1 | 7.4 | 6.9 | 8.7 | 8.6 |
| 1998 | 9.4 | 6.9 | 7.3 | 6.1 | 8.4 | 8.4 |
| 1999 | 4.7 | 3.8 | 3.6 | -0.3 | 4.4 | 4.4 |
| 2000 | 6.2 | 3.2 | 3.6 | 1.7 | 6.7 | 6.7 |
| 2001 | 14.2 | 11.0 | 10.3 | 11.7 | 12.9(அ) | 13.0(அ) |

(அ) தற்காலிக

மூலங்கள் : தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு ஆகக் கீழ் நிலையிலுள்ள 65% வீதமான குழுக்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி பார்க்குமிடத்து, இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நுகர்வோர் உள்ளடக்கம் கீழ்நிலையிலுள்ள 80% வீதம் வரையிலான அதிகூடுதலான நூற்றுவீதமொன்றைக் கொண்டுள்ளமை முக்கியமான காரணியாயுள்ளது. மறுபுறம், முன்னர் தயாரிக்கப்பட்ட அனைத்து விலைச் சுட்டெண்களும் வரையறுக்கப்பட்டதொரு பூகோளப் பிரதேசத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததோடு, இப் புதிய விலைச் சுட்டெண் வட கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய எல்லாப் பகுதிகளும் உள்ளடங்கக் கூடிய விதத்தில் பரந்ததொரு நிலப்பரப்பைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. அதேபோன்று திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டு ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னர் நடாத்தப்பட்ட செலவின மதிப்பீடொன்றை அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளமையும் மேலுமொரு முக்கிய காரணியாகும். மேலும், மாதிரி 16,031 குடும்பங்களைக் கொண்டதொரு பாரிய உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளமையும், இதற்கு முன்னர் சரியான மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதொரு குடும்ப எண்ணிக்கைக்கு வரையறுக்கப் பட்டிருந்தமையும் மேலுமொரு முக்கிய விடயமாகும். ஆயினும், நுகர்வுப் பொருட்களின் எண்ணிக்கை 174க்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. விலை சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கையும் 34 வரை குறிப்பிடத்தக்க அளவுஅதிகரிக்கப்பட்டுள்ள மையையும் காணக்கூடியதாயுள்ளது. 2வது புள்ளிவிபர அட்டவணைக்கு ஏற்ப உணவு பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகளுக்காக 7.2% வீதம் எடைவைக்கப்பட்டுள்ளமை ஏனைய விலைச் சுட்டெண்களில் எடைவைக்கப் பட்டுள்ளவற்றுக்குப் பெரும்பாலும் பொருந்து வதாகவுள்ளது. ஆயினும், ஆடை அணிகள் மற்றும் பாதணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகள் 4% ஆகும். வீடு, நீர், மின்சாரம், எரிவாயு ஏனைய எரிபொருட்களுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகள் 13% வீதமாக உள்ளது.

3வது புள்ளிவிபர அட்டவணைக்கு ஏற்ப பல்வேறு விலைச் சுட்டெண்களுக்கு ஊடாக கணிப்பிடப்பட்டுள்ள பணவீக்க வேகத்தில் சிறு மாற்றங்களைக் காணக்கூடியதாயுள்ள போதிலும், பணவீக்க வேகத்தின் போக்குகள் ஒவ்வொரு விலைச் சுட்டெண்ணிலும் அவ்வளவு வித்தியாசத்தைக் காட்டவில்லை. எவ்வாறாயினும், தாமதித்தாவது முழு நாட்டிற்கும் ஏற்புடையதான விலைச் சுட்டெண் ஒன்றைத் தயாரித்ததன் மூலம் எதிர்காலத்தில் இலங்கையின் பணவீக்க வேகம் தொடர்பாக மிகவும் யதார்த்தபூர்வமான விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமாவதுடன், அதை அடிப்படையாகக் கொண்டு நிதியியல் கொள்கைத் தீர்மானங்களை மிகப் பொருத்தமான விதத்தில் மேற்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

## மானிட தொடர்பாடலின் வளர்ச்சி...

(2 பக்கத்திலிருந்து)

பவுணின், ஜப்பானிய யென்னின் அல்லது ஐரோப்பிய யூரோவின் ஏற்ற இறக்கங்களை ஆராய்ந்து சந்தை ஒழுங்குமுறையைப் புரிந்துகொண்டு நிதியியல் அமைப்பு முறையை நடத்திச் செல்வதற்குத் தொடர்பாடல் வலையமைப்பின் சிறப்பான செயற்பாட்டின் காரணமாகவே நாடுகளால் முடியுமாயுள்ளது.

தொடர்பாடல் தொடர்பாகப் பலரும் பலவிதமான வரைவிலக்கணங்களைக் கொடுக்க முற்படுகின்றனர். ஒரு சிலர் தொடர்பாடல் என்பதை தொலைபேசியும் ஆவணங்களும் எனவும், மேலும் சிலர் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், கணினி மற்றும் இவற்றைத் தழுவிய பல்வேறு கருவிகள் எனவும் குறிப்பிடுகின்றனர். மேலும் சில சந்தர்ப்பங்களில் "பொதுசனத் தொடர்பாடல் என்பது, ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு பெரும் தொகையான மக்களுக்கு, ஏதேனுமொரு செய்தியை அறிவிப்பதாகும். இச்செய்தியானது தொடர்பாடல் அல்லது அறிவிப்புக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு முறையொன்றெனவும், பிரயோக முறையொன்றெனவும் குறிப்பிடப்படுகிறது." இவை அனைத்தும் தத்தமது அறிவுக்கு ஏற்ப கொடுக்கப்படுகின்ற விளக்கங்களாகும். ஆதலால் இவை முழுமையான வரை விலக்கணங்களல்ல என்பது தெளிவாகின்றது. தொடர்பாடல் ஆய்வாளரொருவரான கலாநிதி J.V. Vilanilam, அவருடைய "மிகக் கூர் உணர்வுத் திறனுள்ள தொடர்பாடல்" எனும் நூலில், இன்று தொடர்பாடல் என்ற சொல் உலகம் பூராவும் மிகவும் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்ற சொல்லாகுமெனக் குறிப்பிட்டுள்ளார். (Communi-cation is perhaps one of the most used (as abused) words in the world today. More effective communication - p.23) இவ்வாறான பல்வேறு வரைவிலக்கணங்கள் தொடர்பாக இவ் விடயப்பரப்பினூடே கவனம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றபோது, இதற்கானதொரு அனைத்துலக வரைவிலக்கணமொன்றைக் கண்டுகொள்வது கடினமாயிருப்பதைப் போல் தோன்றுகின்றது. ஆயினும் இதன் அடிப்படைப் பண்புகளைக் கவனத்திற்கொண்டு மிகவும் அண்மியதொரு வரைவிலக்கணத்தை அனைவரினதும் கவனத்திற்காகப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

"பொதுசனத் தொடர்பாடல் என்பது, தொழில்சார் தொடர்புசாதனவியலாளர்கள் பொறிமுறையிலான ஊடகங்களின் உதவியுடன் விரிவான விதத்திலும், துரிதமாகவும், தொடர்ந்தும் தாம் விரும்பிய செய்திகளை, பாரியதும் பல்வேறானதுமான பெறுவோர் துறைகளினூடாக பல்வேறு முறைகளில் அனுப்புவதன் மூலம் இப் பெறுவோர் துறைகளில் ஏதேனுமொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடாகும்."

- Defleur and Dennis -
"Understanding mass Communication"

தொடர்பாடல் அல்லது Communication என்பது லத்தீன் மொழியில் வருகின்ற பகிர்ந்துகொள்ளல் என்ற பொருளைக் கொடுக்கின்ற சொல்லாகிய Communicare என்ற சொல்லிலிருந்து பிரிந்து வந்ததொரு சொல்லாகும். இதன் விரிவான கருத்து யாதெனில், கருத்துக்களையும், எண்ணக்கருக்களையும் அனுபவங்களையும் ஏனையோர்களுடன் பகிர்ந்து கொள்வதாகும். மனிதர்களால் இயலுமாயுள்ளதான காலத்தை முகாமை செய்தல் (Time Manage-ment) அல்லது நடைமுறை வாழ்வை விபரித்தல் மிருகங்களால் முடியாதுள்ளதால், மனித ஆற்றலை உயர் நிலைக்குக் கொண்டுவருவதில் தொடர்பாடல் மாபெரும் சேவையொன்றை ஆற்றுகின்றது.

நவீனவாதத்தின் பிந்திய நிலைமையினுள் அனைத்துப் பொதுசனத் தொடர்பாடல் ஊடகங்களும் சந்தைப் போட்டியை எதிர்கொண்டு, மக்கள் செல்வாக்கைப் பெற்ற கலாசாரத்திற்கு ஏற்ப பரந்த செவிப்புல, கட்புல தேவைகளுடன் கூடிய மக்களைத் தனது பிடிக்குள் சிக்கவைத்துத் தூண்டுகின்ற செயலைச் செய்துகொண்டிருக்கின்றன. அரை நூற்றாண்டுக்கும் கூடுதலான காலத்திலிருந்து இன்னமுமே அபிவிருத்தியடைந்து வரும் நிலையிலுள்ள இலங்கையைப் போன்ற மூன்றாம் உலக நாடுகள் இத் தூண்டுதல் செயற்பாட்டினுள் தடுமாற்றத்துக்குள்ளாகியுள்ளதன் காரணம் யாதெனில், தொடர்பாடல் தனியுரிமையின் முகவர்கள் இந்த நாடுகளின் ஊடக நிறுவனங்களைக் கைப்பற்றியுள்ளமையே ஆகும். 1977 ஆம் ஆண்டில் இஸ்ரேல் பேராசிரியரொரு வரான Elihu kat என்பவரின் ஒரு கூற்றை இங்கு குறிப்பிடுவதன் மூலம் முக்கியமானதொரு செய்தி அறிவிக்கப்படுகின்றது.

"மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சியாளர்கள் மிகவும் நிம்மதியாக உறங்கச் செல்கிறார்கள். உறக்கத்தின்போது, பயங்கரக் கனவுகளைக் காணமாட்டார்கள். அதற்கான காரணம் யாதெனில், தமக்கு மிகவும் நட்புக்குரிய, பணிவான தொடர்பாடல் நிருவாகிகள் ஒவ்வொரு ஊடக நிறுவனத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளதேயாகும்."
Elihu kat - (1977) - "3rd World Communication"

## தொடர்பாடலின் வளர்ச்சி

பின் நவீனவாதச் சூழலினுள் தொடர்பாடல் என்ற விடயமே கூடுதலான கலந்துரையாடலுக்கும் பயன்பாட்டிற்கும் அவதானிப்புக்கும், கற்கைக்கும் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. எப்போதோ, எவராலோ, எவ்விதத்திலோ ஆரம்பிக்கப்பட்ட தொடர்பாடல் செயற்பாடானது, இளம் பருவத்திலிருந்து இற்றையாகும்போது உலகமயமாக்கல் சம்பவத்தைத் தொடர்ந்து பூகோளம் முழுவதையும் தனி ஒரு வலையமைப்பினுள் பிணைத்து விடுமளவிற்கு வளர்சியடைந்துள்ளது. இவ் வளர்ச்சியடையும் பண்பானது இன்று இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதெனக் கருதுவது எவ்விதத்திலும் அறிவுபூர்வமானதல்ல. இது மேலும் மேலும் மாற்றமடைந்து மனிதனது வாழ்க்கை நிலைப்பாட்டை மிக மேல் மட்டத்திற்குக் கொண்டுவரக் கூடியதாய் அமையும்.

மனிதன் பண்டைய காலத்தில் தனது தேவைகளை அறிவித்தது எவ்வாறு என்பதையும் அதனை மீள வடிவமைப்பதும் கடினமானதொரு விடயமாகும். எவ்வாறாயினும் பல கோடி வருடங்களாக மனித பரிணாம வளர்ச்சியினுள் தொடர்பாடல் முக்கிய இடத்தை வகித்துள்ள தென்பதைக் கவனத்திலெடுக்காதிருக்க முடியாது மனித பரிணாம வளர்ச்சி நடைபெறுகின்ற வேகமும், போட்டியும், தொடர்பாடல் செயற்பாடுகள் அதனுள் செய்கின்ற கடமைப் பொறுப்பின் பெறுமதியைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றன.

நவீன ஆரம்ப காலகட்டத்தில் மனித மூளையின் பருமன் அதிகரித்தமை முக்கியமானதொரு பண்பாயிருந்தது. கற்றல், ஞாபகத்தில் வைத்திருத்தல், சிந்திக்கத் தொடங்குதல் இதன் காரணமாக நடைபெறுகின்றன. இதற்குப் பல கோடி ஆண்டுகள் எடுத்தன. இற்றைக்கு 14 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் முதற்றடவையாக ஆபிரிக்காவில் Rampithicus எனும் குரங்கு மனிதன் வாழ்ந்துள்ளதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. இது தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துதல் கடினமாயிருப்பதால் இக் குரங்கு மனிதன் முதுகெலும்பை நேரே நிமிர்த்திக் கொண்டானா எனக் கூறமுடியாதுள்ளது. இதற்குப் பின்னர் கற்குகைகளில் வசித்த, மாமிசத்தை உணவாக உட்கொண்ட, உடம்பை நேரே நிமிர்த்திக் கொண்ட Australopithicus Africans ஆபிரிக்க மனிதன் தொடர்பான தகவல்கள் சான்றுகளின் ஊடாக நிரூபணமாகின்றன. இதே காலகட்டத்தில் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் முதுகெலும்பை நிமிர்த்தி வைத்திருந்த விலங்கினமொன்று (குரங்கு இனம்) வாழ்ந்துள்ளதற்கான சான்றுகள் பல உள்ளன. முதுகெலும்பை நிமிர்த்திக்

கொண்டதைத் தொடர்ந்து நிகழ்ந்த தசைநார்களின் மாற்றமொன்றின் காரணமாக மூளையின் பருமன் அதிகரித்தமையையும் பல்வேறு சமிக்ஞைகளை வெளியிடுவதற்கான ஆற்றல் கிடைத்தமையையும் காணக்கூடியதா யுள்ளது. Homo Habilis மனிதன் இற்றைக்கு இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நெருப்பைப் பயன்படுத்தியுள்ளதற்கான சான்றுகள் சீனாவிலிருந்து கிடைக்கின்றன. நெருப்பு பயன்படுத்தப்பட்டமை மனித தொடர்பாடலில் பெரும் வெற்றியாகும். மனித பரிணாமத்தின் அடுத்த கட்டமாக, மூளையின் கொள்ளளவு ஏறத்தாழ cc600 எனக் கணிக்கப்பட்டுள்ள Homo Erectus மனித இனத்தைக் குறிப்பிடலாம். ஆரம்ப தொடர்பாடல் பண்புகளைக் கொண்டுள்ளதாகக் கருதப்படக்கூடிய அடுத்த மனித இனம் Homo sapians மற்றும் Cro magnons மனிதர்களாகும். இந்த மனித இனங்களை இதுவரையிருந்த ஏனைய அனைத்து மனித இனங்களையும் விட மிகவும் திறமையான இரு மனித இனங்களாகக் குறிப்பிடலாம். இற்றைக்கு 35,000 வருடங்களுக்கு முன்னர் இம் மனிதர்கள் மறைந்து போயினர். இப் பரம்பரையின் அடுத்த வளர்ச்சிக் கட்டமாக தற்கால மனிதர்களைக் குறிப்பிடலாம். Cro magnon மனிதர்கள் தொடர்பாக தற்போது புதைபடிவங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களின்படி நாக்கும், குரல்வளையும் உட்பட்ட உயிர் ஒலி இயக்கத் தொகுதி ஒழுங்கமைந்து கொண்டிருந்ததென்பதைக் காணக்கூடியதாயுள்ளது. Homo sapians போன்ற மனிதர்கள் தொடர்பாடலுக்காக ஒலியெழுப்பிய போதிலும் (கர்ஜித்தல்) Cro magnon மனிதர்கள் உரையாடுவதற்கு ஆரம்பிக்கிறார்கள். மனித நாகரிகத்தின் தற்கால யுகம் இம் மனிதர்களைத் தொடர்ந்தே ஆரம்பிக்கின்றதென மானிடவியலாளர்களின் ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. இப்புரட்சி 90,000-40,000 வருடங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தினுள் நடைபெற்றுள்ளதெனவும், மொழி அல்லது உரையாடல் முறை இற்றைக்கு 35,000 ஆண்டுகளுக்கு முன்னரேயே உருவாகின்றதெனவும் மானிடவியலாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். Cro magnon மனிதர்களைவிட உடற் பலத்தையும் திறமையையும் கொண்டிருந்த Niandathai மனிதர்கள் உரையாட முடியாததன் காரணத்தினாலேயே பூமியிலிருந்து மறைந்தார்களென மானிடவியலாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆயினும் Cro magnon மனிதர்களே முதன்முதலில் உரையாடலையும் மொழியையும் (Speech and Language) பயன்படுத்தினார்கள். இவர்கள் தற்கால மனிதர்களுக்கு மிக நெருக்கமானவர்களாவர். யூப்பிரடீஸ், ரைகிறீஸ் நாகரிகங்கள், கால்நடை வளர்ப்பு, கமத்தொழில், கலை, களியாட்டங்கள் என்பன இவர்களிலிருந்தே ஆரம்பமாகின்றன. இவர்களால் வரையப்பட்ட நூற்றுக்கணக்கான குகைச் சித்திரங்கள் பிரான்சில் பாதுகாக்கப்பட்டுள்ளன.


ஆரம்ப காலகட்டத்தில் பொது மொழியொன்றைப் பேசியுள்ளனரென்பதைக் காணக்கூடியதாயுள்ளதோடு, இற்றைக்கு 5000 வருடங்களுக்கு முன்னர் இருந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் ஏறத்தாழ 50 மொழித்தொகுதிகள் இப் பொது மொழியிலிருந்து பிரிந்து சென்றுள்ளதைக் காணக்கூடியதாயுள்ளது. நெருங்கிய மொழிகளாக இனங்காணப்படுகின்ற பெரும்பாலான தற்காலச் சொற்றொகுதிகள் இவ்வாறு பிரிந்து சென்று அமைகின்ற போதிலும், இவை அனைத்தினதும் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட கால மொழித் தொகுதிகளென்பதைத் தற்போதாவது புரிந்துகொள்ளுதல் வேண்டும். மொழியும் உரையாடலும் அமைத்துக்கொள்ளப் பட்டதைத் தொடர்ந்து ஏற்படுகின்ற தொடர்பாடல் வளர்ச்சிப் போக்கின் அடுத்த கட்டம் எழுத்துக்கலைக் காலகட்டமாகும். எழுத்தணியின் ஆரம்பக் கட்டமாக பண்டைய காலக் குகைகளில் வரையப்பட்டுள்ள மிருகங்களின் உருவங்களையும், வேட்டையாடல் தொடர்பான சித்திரங்களையும் குறிப்பிடலாம். இதிலிருந்து ஆரம்பமாகிய எழுத்தணிக் கலையில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவது ஓவியவெழுத்துக் கலை (Pictograpic) முறையாகும். ஓவியவெழுத்துக்கலை முறை ஏறத்தாழ கி.மு.4000 ஆம் ஆண்டில் எகிப்திலிருந்தும், மொசப்பத்தேமியாவிலிருந்தும் ஆரம்பித்துள்ளதாக அறியக்கூடியதாயுள்ளது. Glyphy எனப்படும் இவ் ஓவிய எழுத்துக்கலை முறை தற்கால சீன, யப்பான் எழுத்துக்களை ஒத்துள்ளது. மிக நீண்டகாலமாக பீனிஷியாவிலும் கி.மு. 14 ஆம் நூற்றாண்டிலிருந்து சீனாவிலும் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தெளிவாகக் காலம் குறிப்பிடப்பட முடியாத இல்கமேஷ் காவியங்களுடன் தொடர்புடைய ஏடுகளை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

தொடர்பாடலியலில் எழுத்துக்கலைக் காலகட்டத்தில் எழுத்தொலியியல் (Phonetic) முறை இதன் பின்னரே உருவாகின்றது. மொசபத்தேமியாவின் சுமேரியன்கள் இவ்வெழுத்துக்கலை முறையின் ஆரம்பகர்த்தாக்களாவர். இங்கு களிமண் ஏடுகளில் ஓவியவெழுத்துக்கள் எழுதப்பட்டன. சரியான வடிவில் எழுத்துக்கள் எழுதப்படாது ஆப்பு வடிவில் அவை இருந்ததால் அவற்றை ஆப்புவடிவ வரைக்கீற்றென்றும் குறிப்பிடுகின்றோம். இது கி.மு. 1700 ஆம் ஆண்டளவில் வளர்ச்சியடைந்தது. இதன் பின்னர் கி.மு. 500 ஆம் ஆண்டளவில் கிரேக்கர்களால் மிக எளிய அரிச்சுவடியொன்று உருவாக்கப்படுவதோடு, அது திரிபுபட்டு உரோமில் தற்கால எழுத்துக்கள் (Capital) அதனோடு சேர்ந்துகொள்கின்றன. இதன்படி பார்க்கின்றபோது, உண்மையாகவே மனித மற்றும் தொடர்பாடல் வரலாற்றில் எழுத்துவடிவில் பதிதல் ஏறத்தாழ 250 பரம்பரைகளுக்கு முன்பே ஆரம்பிக்கின்றது. இதை மனித வரலாற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது மிகவும் குறுகியதொரு காலமாகும்.

கையடக்கமான தொடர்புசாதனம் (Portable media) இதன் பின்னரே உருவாகின்றது. கல் ஏடுகளிலும் களிமண் ஏடுகளிலும் குறிப்புகளைப் பதிவதற்குப் பதிலாக பபிரஸ் (Papirus) மற்றும் Sila (Ficus) களுக்கு மாற்றமுறுவது இக் காலகட்டத்திலாகும். கி.மு. 2500 ஆம் ஆண்டாகும்போது கையடக்கமான தொடர்புசாதனங்கள் உருவாவதன் காரணமாக ஆட்சி நிருவாகம், சமயங்கள், பாடசாலைகள், சட்டவிதிகள், நூலகங்கள், விஞ்ஞானம், கலைகள், கலாசாரம் போன்ற சமூக நிறுவனங்கள் வேகமாகப் பரவத் தொடங்குகின்றன. இதைத் தொடர்ந்து எழுதவும் வாசிப்பதற்குமான ஆற்றலைக் கொண்டவர்களுக்கு உயர் சமூகத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன. சமூக மதிப்புக்கும் ஆளாகின்றார்கள். எழுத்தறிவு வளர்ச்சியடைந்து கலாசாரத்துக்குரியவர்களாகி சமூக மயமாக்கப்படல் இத் தொடர்பாடல் மாற்றத்துடனேயே நிகழ்கின்றது. ஒரு பரம்பரையின் கலாசாரத்தை இன்னொரு பரம்பரையிடம் ஒப்படைப்பது எவ்வாறு என்ற பிரச்சினையை வெற்றிகொள்ள முடியுமானமையே இதன் மூலம் நடைபெற்ற பெரும் மாற்றமாகும்.

தொடர்பாடலின் அடுத்த முன்னேற்றகரமான கட்டம் அச்சுக் கலையாகும். அச்சிடல் என்பதன் மூலம், ''பன்மடங்காக்குதல் அல்லது பிரதியெடுத்தல்'' என்பதே கருதப்படுகின்றது. இங்கு எல்லாப் பிரதிகளும் சமனானதாயிருக்கும். ஒன்றின் மேற்புறத்தின் மீது அழுத்துதலின் காரணமாக ஒன்றின் மேற்புறம் மற்றையதின் மேற்புறத்திற்கு மாறுகின்றது. இன்றேல் பதிகின்றது. இவ்வாறான அச்சிடல் முறை 8 ஆம் நூற்றாண்டில் யப்பானிலும் கொரியாவிலும் நடைபெற்றது. சமயசார்பான ஆவணங்கள் இவ்வாறு அச்சிடப்பட்டன. இவ்வாறு அச்சிடப்பட்ட உலகின் மிகப் பழைமையான அச்சிடப்பட்ட நூலாக கி.பி. 704 மற்றும் 751க்கு இடைப்பட்ட காலத்தில் கொரியாவில் அச்சிடப்பட்ட "தாரணி சூத்திரம்" என்ற நூலே குறிப்பிடப்படுகின்றது. மேலைத்தேய நாடுகளில் இவ்வாறானதொரு அச்சிடல் முறை 15ஆம் நூற்றாண்டிலேயே நடைபெறுகின்றது. அச்சு இயந்திரம் தயாரிக்கப்பட்டு நகர்த்தக்கூடிய அச்சு எழுத்துக்களைக் கண்டுபிடித்த பெருமை ஜேர்மனியரான ஜொவென்னஸ்குடென்பர்க்குக்கே உரித்தாகின்றது. இவருடைய முதல் அச்சிடப்பட்ட நூல், கி.பி.1452-1456 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெளியிடப்பட்ட 42 வரிகளைக் கொண்ட பைபிள் ஆகும்.

மனிதன் பண்டைய காலத்தில் தனது தேவைகளை எவ்வாறு அறிவித்தான் என்பதையும் அதனை மீள வடிவமைப்பதும் கடினமானதொரு விடயமாகும். எவ்வாறாயினும் இலட்சக்கணக்கான வருடங்களாக நடைபெற்ற மனித பரிணாமத்தினுள் தொடர்பாடல் வகிக்கின்ற முக்கியத்துவத்தினை கவனத்திலெடுக்காதிருக்க முடியாது



அச்சிடலைத் தொடர்ந்து தொடர்பாடல் துறையின் புரட்சி ஆரம்பிக்கின்றது. இதன் காரணமாகஅதுவரையிருந்த நிலைமைகளைவிட வெற்றிகரமான தொடர்பாடலொன்று சமூக அமைப்பினுள் உருவாகின்ரது. இதைத்தொடர்ந்து கருத்துக்களையும் தகவல்களையும் பகிர்ந்தளித்தல் அதிகரித்தல், தரப்படுத்தல் ஆரம்பமாதல், முன்னேற்றப்பட்ட பதிப்புக்களும் பாதுகாப்புத் தன்மையும் உருவாதல், உள்ளடக்கம் மற்றும் மாதிரி தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்படுதல் போன்ற போக்குகள் உருவாகின்றன.

### இலத்திரனியல் தொடர்பாடல்

அச்சுக்கலை வளர்ச்சியடைவதைத் தொடர்ந்து தொடர்பாடல் துறையில் முன்னேற்றமொன்று ஏற்பட்டபோதிலும், இவ் வளர்ச்சிப் பண்புகள் அத்தோடு நின்றுவிடுவதில்லை. தொடர்பாடல் முறைகளை மென்மேலும் விரிவாக்கிக் கொள்ளுதலும், அதன் மூலம் சமூகத்தை மேலும் கூர் உணர்வுள்ளதும் செயற்றிறனுடையதுமாக்குவதற்காக நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் முடிவடையவில்லை. இவ் ஆராய்ச்சிகளின் பெறுபேறாகவே ஒலி அலை வரிசைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அலை வரிசைகள் எல்லா இடங்களிலும் உள்ளன. ஆயினும், இவ் அலை வரிசைகளை வெவ்வேறாக இனங் காண்பதற்காக விஞ்ஞான ஆராய்ச்சிகளின் மூலம் எண் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கிணங்க வானொலி அலைவரிசைகளைப் பயன்படுத்தி மனிதனால் அல்லது விலங்குகளினால் எழுப்பப்படுகின்ற ஒலியை எடுத்துச் செல்வதற்கு அலை வரிசைகள் ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு இனங்காணப்பட்ட வானொலி அலைவரிசைகள், தரை அலைவரிசை (Ground waves), நீள் அலைவரிசை (Long waves), மத்திய அலைவரிசை (Medium waves), வான் அலைவரிசை (Sky waves), சிற்றலை வரிசை (Short waves), எப். எம். (FM) அலைவரிசை எனப் பல்வகைப்படுகின்றன. இதன் மூலம் ஒலிச் சக்தி, இலத்திரனியல் (மின்னணு) சக்தியாக மாற்றப்பட்டு கேட்போருக்கு அல்லது பெறுபவருக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. ஆரம்பகாலத்தின் வானொலி Analog Techno-logy மூலமே ஒலிபரப்பப்பட்டது. அதன்பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட எண் குறியீட்டுத் தொழில்நுட்பம் (Digital Technology) பயன்படுத்தப்படுவதைத் தொடர்ந்து மிகத் தெளிவாகச் செவியேற்கக்கூடிய சந்தர்ப்பம் கேட்போருக்குக் கிடைக்கின்றது. இன்று இத் தொடர்பாடல் முறை எவ்வளவு தூரத்துக்குப் பொருளாதார அனுகூலங்களைப் பெற்றுத் தருகின்றதென்றால், அலை வரிசைகளைச் சந்தைப் படுத்துவதன் மூலம் அதிகாரம் வாய்ந்த நிறுவனங்களுக்கும், அலை வரிசைகளைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் ரீதியான ஊடக நிறுவனங்களுக்கும் நிதி ரீதியான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தாயுள்ளது. 1895 இல் குக்லிமோ மார்கோனியினால் உருவாக்கப்பட்ட வானொலி ஒலிபரப்பு முறை இலங்கையில் 1924 ஜுன் மாதம் 27 ஆம் திகதியே உத்தியோபூர்வ ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வானொலி அலை வரிசைகளைப் பயன்படுத்தி செய்திகளைப் பரிமாறிக் கொள்ளுதல் வெற்றி கரமானதொரு தொழில் முயற்சியாக மேலுமொரு துறையின் மூலம் வளர்ச்சி யடைந்துள்ளமையை செலியுலர் தொலைபேசித் தொடர்பாடல் முறை வியாபித்துள்ள விதத்தின் மூலம் காணக்கூடியதாயுள்ளது. ஒலியை களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய ஆற்றலுள்ளமையையும் இத்தொடர்பாடல் முறையின் நீண்டகால வெற்றிக்கானதொரு காரணமெனக் கூறலாம்.

இலத்திரனியல் தொழில் நுட்பத்தின் தற்கால வளர்ச்சிக் காலகட்டமானது, ஒளி அலைவரிசைகளைப் பயன்படுத்தத் தொடங்கியதைத் தொடர்ந்தே ஆரம்பமாகியது. ஒளி என்பது பாரியதொரு அலைவரிசைக் குடும்பத்தில் ஓர் அங்கத்தவர் மாத்திரமே. இவ்வலைவரிசைகளை மின்னணுக் காந்த அலைகள் (Electro Magnatic Waves) எனக் குறிப்பிடுகின்றோம். அலைவரிசைகளை அதிர்வுக்குள்ளாக்குவதன் மூலம் இதற்குப் பாத்திரமாக்கப்படுவது இலத்திரன் மற்றும் காந்த அணுக்களாகும். இவ்வலைவரிசைகளைப் பயன்படுத்துவதன் மூலம் தொடர்பாடல் கருவிகளைப் பயன்படுத்துதல் உலகம் பூராவும் பரவியுள்ளது. தொலைக்காட்சி, கணனி, தொலைநகல் இயந்திரம் மற்றும் பல்வேறு செய்திப் பரிமாற்றல் கருவிகள் அனைத்தும் இவ் வகையைச் சேர்ந்ததாகும். உலகமயமாக்கல் நிகழ்வைத் தொடர்ந்து செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தி 6 விநாடிகளில் பூமியின் எந்தவொரு இடத்திற்கும் எந்தவொரு தகவலையும் ஊடுகடத்தக் கூடிய ஆற்றல் கிடைத்துள்ளது. உலகம் பூராவும் பரவியுள்ள பல்வேறு ஊடக நிறுவனங்களும் இவ் இலத்திரனியல் அலைவரிசைகளைப் பயன்படுத்தித் தகவல்களைச் சந்தைப்படுத்துவதோடு, அரசியல் இயக்கங்களும் அதேபோன்று பொருளாதாரத் தொழில் முயற்சிகளும் மிக நுட்பமான விதத்தில் வெற்றிகரமாக இதைக் கையாள்வதைக் காண்கிறோம். தொடர்பாடலைப் பிரதானமாக 2 பிரிவுகளாக வகுத்துக் காட்டலாம்.



1895 இல் குக்லிமோ மார்கோனியினால் உருவாக்கப்பட்ட வானொலி ஒலிபரப்பு முறை...


அவையாவன:-

1. மனிதத் தொடர்பாடல்
2. விலங்குகளின் தொடர்பாடல் என்றவாறாகும்.

இங்கு மனிதத் தொடர்பாடல் தொடர்பாகவே முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

### மனிதத் தொடர்பாடல்

மனிதன் திருப்தியடையாததொரு விலங்கினமாகும். மனிதனைத் திருப்திப்படுத்துதல் மிகக் கடினமானதொரு விடயமாகும். பொதுவான மனிதனது திருப்தியுறா நிலைமை சமூக முன்னேற்றப்பாதையில் ஒளி விளக்காக விளங்கியது. அதாவது, மனித வாழ்வின் ஆரம்ப காலகட்டத்திலிருந்து இற்றைவரை மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டதும் உருவாக்கப்பட்டதுமான பொருட்களும் சேவைகளும் இத் திருப்தியுறாமையின் காரணத்தினால் உருவாக்கப்பட்டவைகளாகும். மனிதன் இவ்வளவு பெரிய மாற்றமொன்றை ஏற்படுத்தியுள்ளபோதிலும்




திருப்தியுறவில்லை. மென்மேலும் இடைவிடாது ஆராய்ச்சிகள் செய்கிறான். இவ் ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளையே அபிவிருத்தியென்கிறோம். இவ் அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பாடல் பிரவேசத்தின் காரணமாகவே கூடுதலான அர்த்தமுள்ளதாக மாறுகின்றது.

தொடர்பாடல் என்பதை மிகச் சுருக்கமாகக் கூறுவதெனில், கருத்துக்களையும் தகவல் களையும் பரிமாற்றிக் கொள்வதாகும். இன்றேல் ஒருவர் தனது எண்ணங்களை ஏனையோருக்கு அறிவிக்கும் செயற்பாடாகும். தொடர்பாடல் செயற்பாடு முழுமையடைவதற்குத் தேவையான அடிப்படை விடயங்கள் பல உள்ளன. இச் செயற்பாட்டைத் தொடர்பாடல் வட்டம் எனவும் குறிப்பிடுகின்றோம்.

இவை மட்டுமன்றி, மனித தொடர்பாடலை மேலும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் காட்டலாம். அதாவது, வாய்மூல தொடர்பாடல் வாய்மூலமல்லாத தொடர்பாடல் என்றவாறாகும். வாய்மூலத் தொடர்பாடல் என்பது சொற்களை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல் எனப்படுவதோடு, மொழியைப் பயன்படுத்தாது நடைபெறுகின்ற தொடர்பாடல் வாய்மூலமல்லாத தொடர்பாடலாகும். மனித தொடர்பாடலின்போது இவ்விரண்டு விதி முறைகளும் கலந்து பயன்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளதோடு, இவ்விதிமுறைகள் அனைத்தையும் "ஊடகம்" (Media) எனக் குறிப்பிடுகின்றோம். மனிதர்களுக்கிடையே தொடர்பாடல் நடைபெறுகின்ற விதத்தைப் பொறுத்து தொடர்பாடலை நான்கு பிரதனமான மட்டங்களில் காட்டலாம்.

1. தனிநபர் தொடர்பாடல் (Intra personal Communication)
2. நபர்களுக்கிடையிலான தொடர்பாடல் (Inter personal Communication)
3. குழுத் தொடர்பாடல் (Group Communication)
4. பொதுசனத் தொடர்பாடல் (Mass Communication)

**1. தனிநபர் தொடர்பாடல் (Intrapersonal Communication)**

தனி ஒரு நபரினுள் மூளையை அல்லது அகத்தை மையமாகக் கொண்டு நரம்புத் தொகுதிகள் தொடர்புறுவதன் மூலம் நடைபெறுகின்ற உள்ளகத் தொடர்பாடல் செயற்பாடாகும். மனதை அடிப்படையாகக் கொண்டு நினைவூட்டுதல், மீட்டல், சிந்தித்தல், தனிமையில் உரையாடுதல், இன்றேல் தாம் மனதால் தனிமையாகத் தொடர்பாடலில் ஈடுபடுதல் ஆகியன தனிநபர் தொடர்பாடலாகும்.

**2. நபர்களுக்கிடையிலான தொடர்பாடல் (Interpersonal Communication)**

இரண்டு நபர்களுக்கிடையில் நடைபெறுகின்ற தொடர்பாடலையே இது குறிக்கின்றது. இங்கு ஒருவர் அறிவிப்பாளராகச் செயற்படுவதோடு, மற்றையவர் கேட்பவராக இருப்பார். உலகில் கூடுதலாக நடைபெறுகின்ற தொடர்பாடல் செயல்முறை இதுவாகுமென்பதோடு, தற்கால மிக முன்னேறிய தொடர்பாடல் முறைகளுக்கு மத்தியிலும்கூட இந்த நேருக்குநேர் நின்று நடத்தப்படுகின்ற தொடர்பாடல் குறைவடையவில்லை. மேலும் ஒருவர் இன்னொருவருடன் தொலைபேசியினூடாக உரையாடுதல், கடிதம் மூலம் செய்தியொன்றை அனுப்புதல் போன்றவையும் நபர்களுக்கிடையிலான தொடர்பாடல் முறையையே சார்ந்ததாயுள்ளது.

**3. குழுத் தொடர்பாடல் (Group Communication)**

இருவருக்கு மேற்பட்டதொரு குழுவினர் தொடர்பாடலில் ஈடுபடுதல் இதன்மூலம் கருதப்படுகின்றது. இங்கு இச் செயலில்



தொடர்புபடுகின்றவர்களின் தொகைக்குக் குறிப்பிட்டதொரு எண்ணிக்கை இல்லாத போதிலும் தொகை குறைவடைகின்றபோது தொடர்பாடலின் வெற்றிகரத் தன்மை நலிவடைவதற்குக் காரணமாயமைகிறது. நபர்களுக் கிடையிலான தொடர்பாடலில் போன்று, குழுத்தொடர்பாடலிலும் கருத்துக்கள் பரிமாறப்படுகின்றபோது உடனடிப் பிரதிபலிப்பைக் காணலாம். அத்தோடு அறிவிப்பவரும் மீளூட்டப்படுகின்றார். இவ்வாறு உடனடியான பிரதிபலிப்பைப் பெறுதல், நேரடித் தன்மை, நெருக்கம் மற்றும் சகோதரத்தன்மை போன்றவற்றை குழுத் தொடர்பாடலின் ஊடாகக் காணக்கூடியதாயுள்ளது.

## 4. பொதுசனத் தொடர்பாடல் (Mass Communication)

ஏதேனும் பரவலானதொரு ஊடகத்தைப் பயன்படுத்தி ஒரே தடவையில் பெரும்தொகையான பொதுமக்களுக்கு ஏதேனுமொன்றை அறிவிப்பது பொதுசனத் தொடர்பாடல் எனப்படும். இங்கு இயந்திர உபகரணங்களைப் பயன்படுத்தல் அவசியமாயிருப்பதோடு மீண்டும் அதே பொறிமுறையைப் பயன்படுத்தி தகவல்கள் பரப்பப்படுகின்றன. அச்சு ஊடகங்கள் (பத்திரிகைகள், சஞ்சிகைகள், கட்டுரைகள்), வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி அல்லது கணனிகளைப் பயன்படுத்துவதன் மூலமே இது நடைபெறுகின்றது. தற்காலத்தில் இதனூடாக அறிவு, தகவல்களை வழங்குதல் போன்ற சம்பிரதாயபூர்வமான விடயங்களுக்கு மேலதிகமாக பொழுது போக்கு விடயங்களை வழங்குதலே முக்கியமாக நடைபெறுகின்றது. பொழுதுபோக்கு விடயங்களை வழங்குவதற்காக, பல்வேறு வானொலி நிலையங்கள், திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள், அதேபோன்று பத்திரிகைகள் சஞ்சிகைகளைக் கொண்டு நடாத்துதல் பாரியதொரு வர்த்தகத் தொழில் முயற்சியாக வளர்ச்சியடைந்துள்ளது.

பிரசித்திபெற்ற பொதுசனத் தொடர்பாடல் நிபுணரொருவரான கர்ஹாட் டீ. வீப் (Gerhart D. Wiebe) மேற்குறிப்பிடப்பட்ட நான்கு தொடர்பாடல் மட்டங்களையும் சாய்க்கப்பட்ட ஆங்கில 'V' எழுத்தின் வடிவத்தைக் கொண்ட மாதிரியொன்றினுள் விவரிக்கின்றார்.

வலதுபக்க எல்லைவரை தொடர்பாடலில் கலந்து கொள்பவர்களது தொகை துரிதமாக அதிகரித்துள்ளதென்பது இதற்கேற்பத் தெளிவாகின்றது அதேபோன்று பரப்பெல்லையும் விரிவடைந்துள்ளதென்பதைக் காண்கிறோம்.

இந்த நான்கு முறைகளையும் தவிர அனைத்துலகச் செய்மதித் தொடர்பாடல் எனக் குறிப்பிடக்கூடிய தொடர்பாடல் முறையொன்றும் உள்ளது. இந்த அனைத்துலகத் தொடர்பாடலை, தொடர்பாடல் வலயமெனவும் குறிப்பிடுவதோடு இது கருவிகளைப் பயன்படுத்தி நடத்தப் படுவதாகும்.

தற்கால உலகத்தின் மனித தொடர்பாடல் பல்வேறு விடயப் பரப்புகளுக்கு ஏற்ப வெவ்வேறாகவும் வளர்ச்சியடைந்துள்ளது. முதலில் குறிப்பிடப்பட்டதைப் போன்று பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் விடயப் பரப்பை ஆராய்ந்து மாதிரி வடிவிலாக்கப்பட்டு தொடர்பாடல் மிகவும் மிருதுவாக்கப் பட்டுள்ளதென்பதைக் காண்கிறோம். இவ்வாறு முகாமைத்துவத்தின் பொருட்டு தொடர்பாடல் பிரயோகிக்கப்படுகின்ற முறையை முகாமைத்துவத் தொடர்பாடல் எனப் பிரித்தெடுத்து அதற்கேற்புடையதான கலைநுட்பங்களும், உத்திகளும் முன்னேற்றப்பட்டுள்ளன. மேலும், அரசியல், கல்வி, தொழில் முயற்சிகள், சுகாதாரம் போன்ற பிரிவுகளும் தொடர்பாடலின் இவ்வாறான விடயப்பரப்புகளாகும். ஒவ்வொரு விடயப் பரப்பு தொடர்பாகவும் ஒழுங்குமுறையான உத்திகளைப் பயன்படுத்தி தொடர்பாடலை மிகவும் பயனுள்ளதாகப் பிரயோகிப்பதைப் பயனுள்ளதொரு தொடர்பாடலெனக் கருதுகிறோம். இவ் விரிவான விடயப் பரப்பு தொடர்பாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சுருக்கமான விடயங்களைக் கருத்திற்கொண்டு முதலில் குறிப்பிடப்பட்ட வரையறுக்கப்பட்ட வரைவிலக் கணத்தைவிட பொதுசனத் தொடர்பாடல் தொடர்பாக மனநிறைவடையக்கூடிய விதத்திலான வரைவிலக் கணமொன்றை இவ்வாறு குறிப்பிடலாம்.

"பொதுசனத் தொடர்பாடலென்பது தொழில் ரீதியிலான தொடர்புவியலாளர்கள் பாரியதும் பல்வேறுபட்டதுமான பெறுவோர் குழுக்களிடையே குறிப்பிட்டதொரு கருத்தை அறிவிப்பதன் மூலம் அவர்களில் பல்வேறு விதத்தில் தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு ஊடகங்களினூடாக விரிவாகவும் (Widely) வேகமாகவும் (Rapidly) தொடர்ந்தும் (Continuously) செய்திகளை ஊடுகடத்துகின்ற செயற்பாடாகும்."

பொதுசனத் தொடர்பாடலின் வளர்ச்சி மென்மேலும் நடைபெறுவதைக் காணக்கூடியதாயிருத்தல் மனித சமுதாயத்தின் எதிர்காலம் மேலும் பாதுகாப்படைவதைக் காணக்கூடியதாயிருப்பதற்குச் சமமாகும். என்றோ ஒரு நாள் இது அனைத்து உலகங்களுக்குமிடையிலான தொடர்பாடல் வலையமைப்பொன்றாக வளர்ச்சியடைவதைத் தவிர்க்க முடியாது.





## 1. தனிநபர் தொடர்பாடல்

ஒரு தனிநபரினுள் மூளையை அல்லது அகத்தை மத்தியாகக் கொண்டு நரம்புத் தொகுதி தொடர்புறுவதன் மூலம் நடைபெறுகின்ற உள்ளகத் தொடர்பாடல் செயற்பாடாகும். மனதை அடிப்படையாகக் கொண்டு நினைவூட்டுதல், மீட்டல், சிந்தித்தல், தனக்குள்ளேயே உரையாடுதல் அல்லது மனதால் தனக்குள்ளேயே தொடர்பாடலில் ஈடுபடுதல் ஆகியன தனிநபர் தொடர்பாடலாகும்.

## 2. நபர்களுக்கிடையிலான தொடர்பாடல்

இதன் மூலம் கருதப்படுவது யாதெனில், இரண்டு நபர்களுக்கிடையே நடைபெறுகின்ற தொடர்பாடலாகும். இங்கு ஒருவர் அறிவிப்பாளராக இருப்பதோடு மற்றையவர் பெறுபவராவார். உலகில் மிகக் கூடுதலாக நடைபெறுகின்ற தொடர்பாடல் செயல்முறை இதுவாகுமென்பதோடு, தற்கால மிக முன்னேறிய தொடர்பாடல் முறைக்கு மத்தியிலும் கூட இந்த நேருக்குநேர் நடைபெறுகின்ற தொடர்பாடல் குறைவடையவில்லை.






## 3. குழுத் தொடர்பாடல்

இரண்டுபேருக்கு மேற்பட்டதொரு தொகையினர் தொடர்பாடலில் ஈடுபடுதல் இதன்மூலம் கருதப்படுகின்றது. இங்கு இச் செயற்பாட்டில் தொடர்புறுகின்ற தொகையினரின் எண்ணிக்கையைக் குறிப்பிட முடியாதிருப்பினும், எண்ணிக்கை குறைகின்றபோது தொடர்பாடலின் வெற்றிகரத் தன்மை நலிவடைவதற்குக் காரணமாக அமைகின்றது.

## 4. பொதுசனத் தொடர்பாடல்

ஏதேனுமொரு பரவலான ஊடகமொன்றைப் பயன்படுத்தி ஒரே தடவையில் பெரும் தொகையான பொதுமக்கள் குழுவொன்றுக்கு ஏதேனுமொன்றை அறிவித்தல் பொதுசனத் தொடர்பாடல் என்பதன் மூலம் கருதப்படுகின்றது. இங்கு இயந்திர உபகரணங்களைப் பயன்படுத்துதல் அவசியமாய் இருப்பதோடு, மீண்டும் அதே பொறிமுறையைப் பயன்படுத்தி தகவல்களைப் பரப்புதல் நடைபெறுகின்றது. அச்சு ஊடகங்கள் (பத்திரிகைகள், சஞ்சிகைகள், கட்டுரைகள்), வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி அல்லது கணனியைப் பயன்படுத்தியே அவ்வாறு செய்யப்படுகின்றது.

Printed by: Atlanta Graphics, No. 212, Ward Place, Colombo 07.